Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 06 புதன்கிழமை (19.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :54

19 JAN 2005
நகர சபை யாழ்ப்பாணம்.



நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்த நெதர்லாந்து நாட்டின் தூதுவரை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

## பிக்-அப், டிரக்குகள் மற்றும் டிராக்டர்கள் வடக்கு - கிழக்குக்கு அனுப்பி வைப்பு

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு.ஜன.19

பிக்-அப், டிரக்குகள், டிராக்டர்கள் மற்றும் கருவிகள் அடங்கிய வாகன அணியொன்று புலிகளின் கோரிக்கைக்கு இணங்க வடக்கே அனுப்பப்பட்டிருக்கிறது என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த தேவைகளைத் தாமதமின்றி அனுப்பும்படி புனர்வாழ்வு அமைச்சை ஜனாதிபதி பணித்திருக்கின்றார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒருதொகுதி பிக்-அப், டிரக்குகள், டிராக்டர்கள், ஜெனரேட்டர்கள், நீர்ப்பம்பிகள் போன்றவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குக்கு கடந்த 13ஆம் திகதி புனர்வாழ்வு அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

மேலும்,கனரக இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு பெறுவதற்காக ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து கேள்விப் பத்திர விளம்பரங்களை புனர்வாழ்வு அமைச்சு பத்திரிகைகளில் பிரசுரித்துள்ளது.

இவையும் பெரும்பாலும் இந்த உபகரணங்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதங்களை அகற்றுவதற்கும் மீள்கட்டுமானத்திற்கும் பயன்படுத்தப்படும்.

மாவட்ட ரீதியாக அனுப்பப்பட்ட கருவிகள் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் - ஜெனரேட்டர்கள்-7

★ கிளிநொச்சி - பிக்-அப்-2, பெட்டியுடன் டிராக்டர்-5, பெட்டியுடன் இருசக்கர டிராக்டர்-10, ஜெனரேட்டர்-8, நீர்ப்பம்பிகள்-25.

★ திருகோணமலை - பிக்-அப்-2, ஜெனரேட்டர்-15

★ மட்டக்களப்பு - பிக்-அப் 3, ஜெனரேட்டர் 20.

(16ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளியன்று வன்னி வருகிறார் பாலா!

## தலைவர் பிரபாகரனின் அழைப்பின் பேரில்





கிளிநொச்சி,ஜனவரி 19

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இலங்கை வருகிறார். எதிர்வரும் சனிக்கிழமை நோர்வே சமாதானக் குழுவினருக்கும், விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொள்வதற்காக,தலைவர் பிரபாவின் அழைப்பின் பெயரில் அவர் இலங்கை வருகின்றார்.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் தலைமையில் நாளை இலங்கை வரும் அந்த நாட்டு சமாதானத்துக்கான அனுசரணைக் குழுவினர் எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள். இந்தச் சந்திப்பின்போது மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் உடனிருப்பார்.

நாளை வியாழக்கிழமை இரவு பாலசிங்கம் தமது துணைவியாரோடு லண்டனிலிருந்து புறப்படுகிறார். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்குவார்.

அங்கிருந்து விமானப்படை ஹெலியில் அவர் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சியைச் சென்றடையும் பாலசிங்கம் அன்றே தலைவர் பிரபாவைச் சந்தித்துக் களநிலைவரம் குறித்து கலந்துரையாடுவார்.

மறுநாள் நடைபெறும் நோர்வே (16ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுப் பொருளாதார உதவி மூலம் அரசு இராணுவப் பலத்தைப் பெருக்குகின்றது!

## தூதர்களிடம் தமிழ்ச்செல்வன் கவலை தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.19

வெளிநாடுகளிடம் இருந்து பெறும் பொருளாதார உதவிகளைக் கொண்டு அரசு அதன் இராணுவக் கட்டமைப்புகளைப் பலப்படுத்தி வருகிறது.

இதனை நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு தெளிவு படுத்தியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தினதும், நெதர்லாந்து நாட்டினதும் தூதர்களிடம் இவ்வாறு தெரிவித்தார் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதர் சுஸான பிளாங்கட், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதர் வூட்டர் வில்ரன் ஆகிய இருவரும் நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு வந்து தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். காலை 8.15 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ்ச்செல்வனுடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

ஐரோப்பிய யூனியனின் தூதுவரையும் நெதர்லாந்தின் தூதுவரையும் சந்தித்துள்ளோம்.

இயற்கை அழிவுகளை நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்கு முன்னர் எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளை அறிந்துகொள்வதற்காக அவர்கள் எம்மைச் சந்தித்துள்ளனர்.



ஐரோப்பிய யூனியன், நெதர்லாந்துத் தூதுவர்களுக்கு இங்குள்ள நிலைமைகளை எடுத்து விளக்கியுள்ளோம்.

சர்வதேச சமூகத்தினுடைய உதவிகள் மனிதாபிமான உதவிகள் மிக விரைந்து எங்களு (16ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

இராணுவ வாகனம் மோதி உயிரிழந்ததாகத் தெரிவித்துக் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் தேவாலய வீதியைச் சேர்ந்த வைரவன் நடேசு(வயது50) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் வீட்டிலிருந்து சைக்கிளில் கடைக்குச் சென்ற இவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இராணுவ வாகனம் ஒன்று இவரை மோதிவிட்டுத் தப்பிச்சென்றதாகவும், இதனால் அவர் அதே இடத்தில் தலை சிதறிப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்திற்குச் சென்ற கொடிகாமப் பொலீஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர். சடலம் பிரேதபரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளது. (8-13)

## ஐ.நா. உயர்மட்டக் குழு தமிழ்ச்செல்வனை சந்திக்கின்றது

யாழ்ப்பாணம்,ஜன.19

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வருகைதரும் இக் குழுவினர் சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள். (8)

# சமாதான முன்னெடுப்பு, சுனாமி அனர்த்தம் குறித்து ஆராய நோர்வேக் குழு நாளை வரும்

கொழும்பு,ஜன.19

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான சாத்தியங்கள் குறித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் குறித்தும் ஆராய்வதற்காக நோர்வே சமாதானக்குழு நாளை இலங்கை வருகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கில்டி எவ்.ஜோன்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நாளை கொழும்பை வந்தடையும் நோர்வேக் குழு நான்கு நாள்கள் இங்கு தங்கியிருந்து சமாதான முயற்சிகளில் ஈடுபடுவர். அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கும் நேரில் செல்லும் தூதுக்குழுவினர் அங்கு சேதங்களைப் பார்வையிடுவர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பது குறித்து அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் அவர்கள் கலந்துரையாடல்களை நடத்துவர்.

எதிர்வரும் சனிக்கிழமை நோர்வேத் தூதுக் குழுவினர் கிளிநொச்சிக்குச் சென்று அங்கு (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12ஆவது நினைவுதினமும், இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வும் கடந்த 16ஆம் திகதி பிரான் ஸில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளதையும், தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும், 'புலிகளின் குரல்' வானொலியின் பொறுப்பாளர் தமிழன்பன் சிறப்புரையாற்றுவதையும் அங்கு இடம்பெற்ற கலைநிகழ்ச்சியையும் படங்களில் காணலாம். (8)

# மீனவர்கள் உடனடியாகத் தொழில் புரிய வேண்டிய உதவிகளை ஐ.நா.வழங்கும்

## வதிவிடப் பிரதிநிதி வடமராட்சியில் தகவல்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் உடனடியாகத் தொழிலில் ஈடுபடத் தேவையான அனைத்து உதவிகளையும் ஐ.நா. அமைப்பு வழங்கவுள்ளது.

- இவ்வாறு ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மக்னேட் வோஸ்றோம் மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தைப் பார்வையிட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிக்கு வருகை தந்த மிக்கேல் டேமியோ அம்மையார், ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மக்னேட் வோஸ் றோம் ஆகியோர் வடமராட்சி வடக்கு மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகளைப் பருத்தித்துறைச் சிவன் கோயில் மண்டபத்தில் சந்தித்து அனர்த்த விவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்திய மக்னேட் வோஸ் றோம் மேலும் கூறியதாவது:-

கடந்த மூன்று வாரங்களாக உடனடி நிவாரணத்தைப் பெற்றுவரும் உங்களுக்கு உடனடித் தொழில் வாய்ப்புக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கவுள்ளோம்.

நிகொட், ஐ.நா.அமைப்புகளால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கருத்திட்ட அடிப்படையிலான முன்மொழிவுகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்போம். எதிர்காலத்தில் முதலீட்டுத்தொகை அதிகரிக்கப்படும்.

ஆழ்கடல் மீன்பிடித்தொழிலுக்கான வசதிகளையே நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்கள். ஆழ்கடல் மீன்பிடித்தொழிலுக்கு எம்மால் வழங்கப்படும் உதவிகள் சிறிது தாமதமாகும்.

ஆனால், தற்போதைக்கு உடனடியாக மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதற்கான வசதிகளைச் செய்துதருவோம். மீனவர் வாழ்வு மேம்பட இயன்ற உதவிகளைப் புரிவோம்.

கடற்றொழிலாளர் சங்க நடவடிக்கைகளைக் கணனிமயப்படுத்தத் தேவையான கணனிகளை நாம் தந்துதவுவதோடு, அவற்றை இயக்குவதற்கான பயிற்சிகளையும் வழங்குவோம் - என்றார்.

அங்கு உரைநிகழ்த்திய ஐ.நா.சிறப்புப் பிரதிநிதி மிக்கேல் டேமியோ அம்மையார் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மக்கள் பேரலை அனர்த்தத்தால் பட்ட துன்ப, துயரங்களை அறிந்து இங்கு வந்து பார்க்க விரும்பினார். ஆனால், வேலைப்பளு காரணமாக அவர் உடனடியாகத் திரும்பவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

உங்களுக்கு ஏற்பட்ட துன்ப, துயரங்களுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவிக்குமாறு என்னிடம் பணித்துள்ளார். அவரது ஆழ்ந்த அனுதாபத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (த-173)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நெடுந்தீவில்

நெடுந்தீவு.ஜன.19

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவின் இந்த ஆண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் ரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் இந்த ஆண்டின் முற்பகுதியில் பிரதேசத்தில் செயற்படுத்தவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் சேவைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (த-112)

## மெய்கண்டான் ம.வியில் சரஸ்வதி சிலை

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய கந்தையா மண்டப முகப்பில் அழகிய சரஸ்வ[...] சிலையை நிறுவும் பணிகள் நிறைவுபெற்று வருகின்றன. இந்தச்சிலையை நிறுவ ஆசிரியர் சி.ஞானச் சந்திரமூர்த்தி உதவியுள்ளார். விரைவில் இந்த சரஸ்வதி சிலை திறந்துவைக்கப்படவுள்ளது. (த-28)

# ஓடிவாங்கோ..... ஓடிவாங்கோ...... 'கிறீம்' வாங்கினால் கோதுமை மா

கைதடி,ஜன.19

பூனை வாங்குபவனுக்குத்தான் குதிரை விற்கப்படும் இப்படியொரு தென்னாலிராமன் கதையுண்டு அப்படித்தான் இதுவும்.

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் இப்படிச் சில தென்னாலிராமர்கள் தங்கள் விற்பனைத் திறனை உறுதி செய்திருக்கிறார்கள்.

மக்களின் உடைமை என மார்தட்டிக்கொள்ளும் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான விற்பனை நிலையமொன்றில் இப்படியானதொரு சம்பவம் இடம்பெற்றிருப்பது - இடம்பெற்றுக் கொண்டிருப்பதுதான் வேதனை.

முகத்துக்குப்பூசும் 15 ரூபா பெறுமதியான முகப்பூச்சு கிறீம் பைகள் (fairever) ஒன்றை வாங்குபவருக்கு மட்டுமே கோதுமை மா 2 கிலோ வழங்கப்படும் - என்று கூறிஅதை நடைமுறைப் படுத்தியும் விட்டார்கள் என்றால் இதை என்னவென்று சொல்வது.

அண்மையில் ஏற்பட்ட கோதுமை மா தட்டுப்பாட்டை அடுத்து இப்படியான விசனத்துக்குரிய - விசமத்தனமான - செயற்பாடு இடம் பெற்றுவருகிறது.

மேற்படி விற்பனை நிலையக்களஞ்சியத்தில் நீண்ட காலமக விற்கப்படாமலிருந்த 'கிறீமை' விற்பதற்கு நிர்வாகம் மேற்கொண்ட 'யுக்தி' தான் இது என்று தன் கண்டனத்தை வெளியிட்டார் அந்தப்பகுதிப் பெரியார் ஒருவா.(த-75.[...])

# காரைநகர் ஆயிலியில் இன்று அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.19

காரைநகர் ஆயிலி இந்து இளைஞர் மன்றத்தினை மீள இயங்கச்செய்தலும் அறநெறிப் பாடசாலையின் ஆரம்பவிழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆயிலி இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான பண்பாட்டு அலுவலர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விநாயகர் வழிபாடு, கோபூசை, திருமுறை ஓதல் என்பன இடம் பெற்றுத் தொடர்ந்து இந்து இளைஞர் மன்றத்திற்கான புதிய நிர்வாக சபைத்தெரிவும், அறநெறிப்பாடசாலையின் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய ஒரு தொகுதி நூல்கள் இந்த நிகழ்வில் வைத்து அறநெறிப்பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்படும் என ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான பண்பாட்டு அலுவலர் தெரிவித்தார். (எ)

# சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகள் மந்திகையில்

கரவெட்டி.ஜன.19

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு மரணமானவர்களின் சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட ஆபரணங்கள் சில பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக எடுத்துவரப்பட்டபோது அவற்றில் காணப்பட்ட தங்க ஆபரணங்கள் கழற்றப்பட்டன.

இவ்வாறு கழற்றப்பட்ட 7 சோடி தோடுகள், ஒரு சோடி தூக்கணம், கழுத்துச் சங்கிலி - 1, காற்சலங்கைகள் என்பனவே வைத்தியசாலையில் உள்ளன.

இவற்றை மேற்படி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சடலங்களின் உறவினர்கள், அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ-70-204)

## சாரதி அனுமதிப்பத்திரம் விசேடமாக வழங்க திணைக்களம் ஏற்பாடு

கொழும்பு,ஜன.19

கடந்தமாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்களை இழந்தவர்களுக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தற்காலிக விசேட அனுமதிப்பத்திரங்களை வழங்கவுள்ளது.

தற்காலிக அனுமதிப்பத்திரங்களை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் தலைமைக் காரியாலயமான நாரஹேன்பிட்டியவிலும், வெரகலவில் உள்ள அலுவலகத்திலும் பெறமுடியும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் பி. விஜயரத்ன தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரங்கள் தொலைந்தது உண்மை என உறுதிப்படுத்திய பின்பே விசேட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மேலும் கூறுகையில்-

விசேட சாரதி அனுமதிப்பத்திரமும்,வாகன அனுமதிப்பத்திரமும் 'ஏ' எனும் எழுத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

விசேட அனுமதிப்பத்திரங்கள் ஆறுமாத காலம் வரை மட்டும் செல்லுபடியாகும் எனவும் தெரியவருகிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களில் அநேகர் அடையாள அட்டை இல்லாமையால் பெரும் சவால்களையும், கஷ்ரங்களையும் எதிர் நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.(க-8)

# ஆறுமுகனார் கேட்ட அமைச்சை கொடுப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு!

## அதனால் இ.தொ.கா.-அரசு உறவில் விரிசல்?

கொழும்பு,ஜன.19

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எதிர்பார்ப்புகளுக்கு வீழ்ந்தது இடி. அக்கட்சியின் தலைவர்கள் கேட்ட அமைச்சுப் பதவியைக் கொடுக்க முடியாது என கைவிரித்து ஜனாதிபதி கொடுத்துவிட்டார் பலத்த அடி.

இதனால் அரசுக்கும், இ.தொ.காவுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டிருக்கிறது நெருக்கடி.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்கள் அண்மைக் காலத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க மூன்று தடவைகள் முயற்சித்தும் ஜனாதிபதி அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லையாம்.

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையின்றி அல்லாடிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசைப் பலப்படுத்துவதாகக் கூறி அரசுடன் இணைந்து இ.தொ.காங்கிரஸ் அதற்குப் பிரதி உபகாரமாகத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவியையும், அந்த அமைச்சுக்குரிய பிரதி அமைச்சுப்பதவியையும் பெற்றுகொண்டது.

மாகாணசபைகளுக்கான தேர்தலின்பின் பெரும்பான்மையின்றி, இழுபறி நிலையில் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாகாண அரசுகளுக்கும் ஆதரவை வழங்கி, அவற்றுக்கு முண்டுகொடுத்து சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணசபைகளிலும் உபதலைவர் பதவிகளையும் இ.தொ.கா. பெற்றுக் கொண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தனக்கு நகர அபிவிருத்தி, தேசிய நீர்வழங்கல் சபைகள் அமைச்சுப் பொறுப்பையும், இ.தொ.கா. உப தலைவர் பைசல் முஸ்தபாவுக்கு அந்த அமைச்சுக்குரிய பிரதியமைச்சர் பதவியையும் வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார் எனச் செய்திகள் கசிந்திருந்தன.

இ.தொ.காவின் கோரிக்கை மறுபரிசீலனை செய்யப்படும் என ஜனாதிபதியும் அவ்வப்போது உறுதியளித்து வந்திருந்தார்.

ஆனால், சிரேஷ்ட அமைச்சர்கள் ஆறுமுகத்தின் இக் கோரிக்கையை நிறைவுசெய்வதை எதிர்த்ததுடன், அவருக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களை விட்டுக்கொடுக்கவும் மறுத்துவிட்டனர்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேரடியாகவே தனது அமைச்சை விட்டுக்கொடுக்க முடியாது எனக் கூறிவிட்டார் எனத் தெரிகின்றது.

எனவே, இ.தொ.கா. கேட்டுக்கொண்ட நகர அபிவிருத்தி, தேசிய நீர்வழங்கல் சபைகள் அமைச்சை அவருக்கு வழங்கமுடியாது என ஜனாதிபதி அவருக்குத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார் எனத் தெரிகிறது. தேவையானால் வேறு ஏதாவது முக்கியமற்ற அமைச்சு ஒன்றைத் தொண்டமானுக்கு வழங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம் என்றும் ஜனாதிபதி கூறிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு இ.தொ.காவின எதிர்பார்ப்புக்களை தகர்த்துவிட்டதோடு அதற்குப் பெரும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளதாம்.

அரசின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக இ.தொ.கா. உயர்மட்டம் தீவிரமாகப் பரிசீலனை செய்துவருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஜ-க)

# ஈரான் அணுத்திட்ட தகவல்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும்

## தவறினால் தாக்குதல் தொடுக்கும் சாத்தியம் உள்ளதென புஷ் தெரிவிப்பு



வாஷிங்ரன்,ஜன.19

ஈரானிய அரசு சந்தேகத்துக்கு இடமான அணு ஆயுத உற்பத்தித்திட்டங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களைப் பகிரங்கமாக வெளியிடவேண்டும். இல்லாவிட்டால் அந்நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் சாத்தியக்கூறுகளை நிராகரிக்கமுடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார்.

எம்.பி.ஸி. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியிலேயே ஜோர்ஜ் புஷ் இவ்வாறு கூறினார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளும் பென்ரகன் அமைப்பு தெரிவித்த கண்டனங்களை அடுத்து புஷ்ஷினுடைய இக்கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஈராக் அபாயகரமான ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என்றும் -

அவற்றை இனங்காண்பதற்காக கண்காணிப்பு முயற்சிகளை ஆரம்பிக்கப்போவதாகவும் - பென்ரகனின் உயர் அதிகாரி ஒருவர் ஊடகப் பேட்டி ஒன்றின் மூலம் தெரிவித்திருந்தார்.

(த-க)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நேபாளத்தில் இருவர் மரணம்!

நேபாளத் தலைநகரில் உள்ள இந்தியத் தூதரகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த இந்தியக் காவல் உத்தியோகத்தர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் இனனும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இது எதிர்பாராத விதமாக நடந்த துப்பாக்கிப் பிரயோகமாகத் தெரிகிறது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு நேபாளத்தில் உள்ள தூதரகத்தில் ஆயுதம் ஏந்திய பொலீஸ் உத்தியோகத்தர்களைக் கடமையில் ஈடுபடுத்தியிருக்கிறது.

நேபாள இராணுவத்திற்கு கூடுதலான இராணுவத் தளபாடங்களை வழங்கும் நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது (த-க)

# பேரழிவு ஆயுதங்கள் ஈரானில் உள்ளனவா

## அமெ. உளவுச் சோதனை

நியூயோர்க்,ஜன.19

ஈரானில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிய அமெரிக்கா அந்நாட்டில் இரகசிய உளவுப் பணிகளில் ஈடுபட்டுவருகிறது.

இத்தகவலை அமெரிக்காவின் 'நியூயோர்க்கர்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

விருதுகள் பெற்ற பிரபல எழுத்தாளர் சேமூர் ஹெர் ஷ் எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஈரானில் பேரழிவு ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாகச் சந்தேகிக்கப்படும் இடங்களிலேயே இந்த உளவுப் பணிகள் இடம்பெற விருப்பதாக தனது கட்டுரையில் ஹெர் ஷ் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டிவருகிறது. ஆனால், அதனை நிருபிக்கமுடியவில்லை.

இதேவேளை -

இது ஒரு பயங்கர வாதத்திற்கு எதிரான போர் ஈராக்கில் இடம்பெற்ற போர் இதன் ஒரு கட்டமாகும். அடுத்த அமெரிக்காவின் இலக்கு ஈரானாகும்" என்று சிரேஷ்ட அமெரிக்க புலனாய்வு அதிகாரி ஒருவர் 'நியூயோர்க்கர் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(த-க)

# பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு புலம்பெயர் ஈராக்கியர்கள் பதிவு

பக்தாத்,ஜன.19

புலம்பெயர்ந்து வாழும் ஈராக்கியர்கள் நடைபெறவுள்ள ஈராக் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக தாம் தங்கியுள்ள நாடுகளில் அவர்களைப் பதிவுசெய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியா தொடக்கம் அமெரிக்கா வரையிலான 14 நாடுகளில் வாக்காளர்களைப் பதிவுசெய்யும் நடைமுறை தொடங்கியிருக்கிறது. இந்த நடைமுறை இம்மாதம் 23ஆம் திகதி வரை தொடரும்.

ஈராக்கில் ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுக்கும் அரசைத் தெரிவுசெய்வதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இந்தத் தேர்தலுக்கு முன்னதாக ஈராக்கிய மண்ணில் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. எத்தகைய தடங்கல்கள் வந்தாலும் இத்தேர்தலை நடத்தியே தீரப்போவதாக அமெரிக்காவும், ஈராக் இடைக்கால அரசும் கூறிவருகின்றது. (த-க)

# கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் விபத்து என்கிறது அரச ஆய்வு

புதுடில்லி,ஜன.19

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மிகப்பெரிய மதக் கலவரம் மூள்வதற்குக் காரணமாக இருந்த கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் ஒரு விபத்தே என்று இந்திய அரசு நடத்திய ஆய்வு கூறியுள்ளது.

இந்துமத பக்தர்கள் பயணித்த ரயில் மீது முஸ்லிம் கலகக்காரர்கள் பெற்றோல் குண்டுகளை வீசியதாலேயே தீப்பிடித்தது என முன்னர் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்தத் தீ விபத்துச் சம்பவத்தை அடுத்து வாரக் கணக்கில் குஜராத் மாநிலத்தில் இந்து முஸ்லிம் மதக் கலவரம் நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

ஆனால், ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் நடத்தப்பட்டுள்ள பக்கச்சார்பற்ற விசாரணையில் ரயிலில் தீ ஏற்பட ஒரு சமையல் அடுப்பு காரணமாக இருந்திருக்கலாம் என்பதற்கு நிறையத் தடயங்கள் கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

வெளியிலிருந்து பெற்றோல் ஊற்றப்பட்டதாகக் கூறப்படுவதை இந்தத் தீவிபத்தில் காயமடைந்த பயணிகளே மறுத்துள்ளனர் என்று விசாரணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. விசாரணைகள் இன்னமும் முடியவில்லை. இது வரை கிடைத்த ஆதாரங்களை வைத்து தீ விபத்துக்கான முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டு இடைக்கால அறிக்கையை அளிக்கவேண்டியது அவசியம் எனக் கருதியமையாலேயே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-க)

# சுனாமிப் பேரனர்த்தங்களில் இருந்து கற்றுக்கொள்ளவேண்டியது ஏராளம்

## ஐ.நா.பொதுச் செயலாளர் தெரிவிப்பு



கொபே,ஜன.19

சுனாமிப் பேரலைகளிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய விடயம் ஏராளம் இருக்கின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

அதிகத் தொகையை முதலீடு செய்வதன்மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற உயிர்ச்சேதங்களையும், பொருட் சேதங்களையும் தவிர்க்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கோபி அனான் கொபே என்ற ஜப்பானிய நகரில் நடைபெறும் 5 நாள்கள் மாநாட்டை ஆரம்பித்துப் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பூகம்பப் பேரலைகள் தாக்குவதற்கு முன்னர் அதுகுறித்த முன்னெச்சரிக்கைச் செய்திகளுக்காகப் பணத்தைச் செலவிட்டிருந்தால் இந்தப் பேரழிவு தடுத்திருக்கலாம் என்பது கோபி அனானின் கருத்தாக இருந்தது.

கொபே நகரை ஒரு தசாப்தத்தின் முன்னர் தாக்கிய பூகம்பம் 6ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களைப் பலிகொண்டது.

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் சுற்றாடலில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியிருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சீற்றம் கடற்கரைகளையும் பவளப் பாறைகளையும் அழித்திருக்கிறது. நிலப்பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களை உவர்த்தன்மை வாய்ந்ததாக மாற்றியிருக்கின்றது என்று சுற்றுச் சூழல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட சேதம் தெளிவாகத் தெரியவில்லை. ஏனென்றால், இந்தச் சேதங்களை மதிப்பீடுசெய்யும் முயற்சிகளைவிட மீட்புப் பணிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்று கோபி அனான் தெரிவித்தார். (த-க)

# வீரப்பனுக்கு சிலை வைக்கப்பட்டதில் சட்டமீறல் இருந்தால் அகற்றப்படும்

## சேலம் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

சேலம்,ஜன.19

சந்தன மரக்கடத்தல் வீரப்பனுக்குச் சிலை வைக்கப்பட்டதில் சட்ட மீறல்கள் இருந்தால் அந்தச்சிலை உடனடியாக அகற்றப்படும் என்று தமிழகம், சேலம் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் என். தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் தெரிவித்ததாவது:-

மேட்டூரில் சந்தன மரக்கடத்தல் வீரப்பனின் சடலம் புதைக்கப்பட்டுள்ள மூலக்காட்டுப்பகுதியில் 3 அடி உயரத்திற்கு வீரப்பனின் சிலை நிறுவப்பட்டுள்ளது - கட்டப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பெரிய செய்தியாகக் கருதவேண்டாம். பத்திரிகை, தொலைக் காட்சியினர்தான் பரபரப்பான ஒரு பெரிய விடயமாக்குகின்றனர். வீரப்பன் குறித்த பரபரப்பு ஓரிரு ஆண்டுகளில் முற்றுமுழுதாக மறைந்து விடும்.

சமாதியில் வைக்கப்பட்டுள்ளது சாதாரண மண்சிலைதான். இந்தச் சிலையைக் கட்டியதில் சட்டமீறல்கள் உள்ளனவா என்று ஆய்வு செய்துவருகிறோம்.

இதை வைத்தது யாரால்? எங்கு இது உருவாக்கப்பட்டது - தயாரிக்கப்பட்டது - என்ற விசாரணையும் இரகசியமாக நடைபெற்றுவருகிறது.

தனியாருக்குச் சொந்தமான இடங்களில் சிலைகளை வைத்துக்கொள்வதில் எவ்விதப் பரச்சினையும் இல்லை. ஆனால் பொது இடங்களில் சிலை வைப்பதற்கு முறைப்படி அனுமதிபெறவேண்டும்.

வீரப்பனின் சடலம் புதைக்கப்பட்டுள்ள இடம் பொதுப்பணித்துறையினருக்குச் சொந்தமானது எனத் தெரியவருகிறது. எனவே பொதுப் பணித் துறையினர் குற்றச்சாட்டு தெரிவிக்கும் பட்சத்தில் சிலை அகற்றப்படும் - என்றார்.

(த-க)

உலக அரங்கில்

# அந்தமானில் பழங்குடியினருக்கு அரசு நிவாரணத் தடை விதிப்பு

போர்பிளேயர்,ஜன.19

அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் பழங்குடி இனத்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு நிர்வாகத்தினர் புதிய தடைகளை விதித்துள்ளமை விமர்சனங்களைக் கிளப்பியுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலைகளால் பேரழிவுகளைச் சந்தித்துள்ள அந்தமான் - நிக்கோபார் தீவுகளுக்கு உள்ளூர் தன்னார்வ உதவிக் குழுக்கள் வழங்கிய நிவாரணப்பொருள்களை எடுத்துச்சென்று விநியோகிக்க அரச நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து பழங்குடி இன அமைப்புகள் கடும் விமர்சனங்களை தெரிவித்துள்ளன.

மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிக்கோபார் தவுகளில் உள்ளூர் தன்னார்வக் குழுக்கள் நிவாரணப்பணிகளைச் செய்வதையும், அந்தமான் - நிக்கோபார் அரச நிர்வாகம் தடுத்து நிறுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முன்னதாக வெளிநாட்டு உதவிக்குழுக்கள் நிவாரணப் பணிகளை அத்தடை உள்ளூர் குழுக்கள் மீதும் விதிக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூகங்களுக்கும் போதிய அளவில் நிவாரணம் வழங்கிவருவதாக அரச நிர்வாகம் கூறியுள்ளது.

ஆனால், நிக்கோபார் தீவு மக்களின் தேவைகள குறித்து அக்கறை இல்லாதவர்களாய் அரச நிர்வாகம் செயல்படுகிறது. என பழங்குடி இன நிர்வாக சபை விமர்சித்துள்ளது.(த-க)




# எதிரிப்படைகளிடம் பாலியல் உணர்வை தூண்டும் வகையில் புதிய ஆயுதம்!

## தயாரிப்பதற்கு அமெரிக்கா திட்டம்?

வாஷிங்ரன்,ஜன.19

எதிரிநாட்டு இராணுவச் சிப்பாய்களிடம் ஓரினச் சேர்க்கைக்கான பாலியல் உணர்வைத் தூண்டும் இரசாயன ஆயுதம் ஒன்றைத் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்று அமெரிக்க இராணுவத்தின் பரிசிலனையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இத்திட்டத்திற்கு அனுமதிகோரி கடைசியாகச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவும் இராணுவத் தரப்பால் மறுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் ஒஹியோவில் உள்ள விமானப் படை ஆராய்ச்சிப் பரிசோதனை நிலையமே மேற்படி திட்டத்தை முன்வைத்தது.

உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தாத இரசாயன ஆயுதம் தயாரிப்பதற்கான இந்தத் திட்டம் சுமார் இலங்கை நாணயப்படி 64 கோடி ரூபா செலவில் தீட்டப்பட்டது. இதன் பிரகாரம் தயாரிக்கப்படும் குண்டு எதிரி நாட்டில் விழுந்ததும், அதிலிருந்து எழும் புகையில் கலந்திருக்கும் இரசாயனம் இராணுவச் சிப்பாய்களிடம் ஓரினச் சேர்க்கைக்கான பாலியல் உணர்வைத் தூண்டிவிடும். இதனால் எதிர்நாட்டு இராணுவத்திடம் ஒழுக்கம், கட்டுப்பாடு குலையும்.

இதுதவிர, எதிரிகள் இராணுவ முகாம்களுக்கு விஷப் பூச்சிகளையும் கொடிய மிருகங்களையும் கவர்ந்து ஈர்க்கின்ற இரசாயனப் பவுடர் ஒன்றைத் தயாரிக்கவும் மேற்படி விமானப் படை பரிசோதனை நிலையம் அனுமதி கோரியிருக்கின்றது.

(த-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 3013239, 0777 168582. (40987)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. New R.S.K. Farm - மான்ஸ் பாட சாலை வீதி, உடுவில், New R.S.K., Farm மானிப்பாய் வீதி, உடுவில்(பெரியமதவடி).(40829)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (40792)

## வாடகைக்கு

14, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள வீட்டில் இரு அறைகள் வாடகைக்கு உண்டு. மருத்துவபீட மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021 - 4590167. (40982)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் பல வாகனங்கள் நிறுத்திவைக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு ஏற்றது. தொடர்புகளுக்கு: இல.151, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 6688300, 077 6258028. (40983)

## தவறிவிட்டது

கைதடி, தச்சன்தோப்பைச் சேர்ந்த அழகராசா சாந்தகுமாரி என்பவருடைய தேசிய அ.அ. (இல.566493152V) கைதடிக்கும் யாழ்நகருக்கும் இடையில் 15.01.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் 0777 111088 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (40965)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்நத, 33 வயது, நட்சத்திரம் உத்தராடம் முதலாம் பாதம் (தனுசு ராசி), லண்டனில் நிரந்தர குடியுரிமை உள்ள மணமகனுக்கு 25 வயதிற்கு உட்பட்ட அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2475, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (40955)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 31.01.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40990)

## விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சுவீதியில் கனியார் ஒழுங்கையில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: (சி-40507)
T.P.: 0776 532186

## தேவை

காணிக் கட்டடத்தைப் பராமரிப்பதற்கு ஆள் தேவை. தோட்ட வேலையில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளம் வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். (T.P. இலக்கத்துடன்).
எம்.இராஜநாயகம் அன்கோ, பட்டயக் கணக்காளர்கள்,
140, பலாலி வீதி, திருநெல்வேலி.
(24-19-17) T.P.: 222 2478 (40989)

## தேவை

யாழ். பேபி நீட்ஸ் அன் பார்மஸியில் வேலைசெய்வதற்கு அனுபவம் வாய்ந்த கணக்காளா (Accountant/Book Keeper) தேவை.

நேர்முகத்தேர்வு (20.01.2005)
*வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு.*

யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மஸி
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(40967)

## ஜெனரேற்றர் அன்பளிப்பு

யாழ். சுகாதாரத் திணைக்களம் கடந்த வாரம் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர் ஒன்றை வழங்கியுள்ளது. அண்மையில் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்குச் சுகாதார அமைச்சினால் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஜெனரேற்றர்களில் ஒன்றே இவ்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-135)

# மாதகல் இளைஞர் சங்கம் பாதிப்புற்றோருக்கு உதவி

வலி.தென்மேற்கு,ஜன.19

சுனாமி கடல் பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு மாதகல் இளைஞர் சங்க சனசமூக நிலையத்தினர் உலர் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளனர். (த-135)

## யா/ நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 1719
இரண்டாம் பரிசு இல. 1513
மூன்றாம் பரிசு இல. 1399

பரிசுக்குரியவர்கள் மேற்படி இலக்க ரிக்கற்றுக்களைப் பாடசாலையில் பா.அபி. சங்கத்திடம் ஒப்படைக்கவும்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (40984) (24-19-17) - S.B.V.

## பெண்களுக்கான அழகுக்கலை வகுப்புகளும் சேவைகளும்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன

வகுப்புகள் பிரபல அழகுக்கலைப் பயிற்றுநரும் Moon Beauty care இயக்குநரும் நடன ஆசிரியையுமான திருமதி B.அஜிலா அவர்களினால் நடத்தப்படும்.

இடம்: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
[இந்து குருகுலம் அருகில்]

1. Advance Course (3 மாதம்) - சான்றிதழ் வழங்கப்படும்
2. Diploma Course (2 மாதம்) - சான்றிதழ் வழங்கப்படும்
3. 1 மாத Course (1 மாதம்) - சான்றிதழ் இல்லை

ஒரு மாதப் பயிற்சிநெறியின் உள்ளடக்கம்

1. Facials (5 - வகை):-Gold (Galvanic), Pearl (High frequency),Herbal, Aroma, Fruit.
2. Warts Remove :- பாலுண்ணிகள், காய்கள் அகற்றுதல்
3. Hair Styles 15 வகைகளில் 4. Hair Cutting 4 வகை
5. Bridled dressing - Hindu, Christian, Kujarath
6. Make Up:- Simple, Bridle, Oil, Dance
7. Eye Brow Shapping & Threating
8. Scalp Massage and under eye Treatment
9. Mehenthi:- Arabian, Cultural 10. கூந்தல் பராமரிப்பு முறை

ஏனைய Course சம்பந்தமாக மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் வரும் சனி, ஞாயிறுகளில் காலை 9-12 மணி வரை மேல் உள்ள விலாசத்தில் சந்திக்கவும் அல்லது T.P. இல் தொடர்புகொள்ளவும்.

* Colombo, Jaffna, Vavuniya Wedding Orderகள் ஏற்றுக்கொள்ளப்படும் (ஒருமாதத்திற்கு முதல் தொடர்புகொள்க).
* Facials செய்யவிரும்புவோரும், Warts Remove, Eye Brow Shapping, தலைமுடியை Rebonding, Perming & Curling செய்யவிரும்புவோர் முன் தொடர்பு கொண்டு வரவும்.

*மேலதிக விபரங்களுக்கு:-*
R.T.R. பெண்கள் அழகுக் கலைநிலையம்
பிரதான வீதி, மானிப்பாய். 0777 -570138, 0777-677079.
(40969)

# பண்டத்தரிப்பு உப அலுவலக கட்டடம் திருத்தப்படவில்லை

வலி.தென்மேற்கு,ஜன.19

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது பாதுகாப்புப் படையினரால் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்ட வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகக் கட்டடம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனை விரைவில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாதகல் கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

மாதகல் பிரதான வீதியில் உள்ள சொந்தக் காணியில் நிறுவப்பட்டிருந்த இக்கட்டடம் கடந்த 1992ஆம் ஆண்டில் முற்றாக அழிக்கப்பட்டது. இதனைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

தற்போது இந்த அலுவலகம் தனியாருக்குச் சொந்தமான வாடகை கட்டடத்தில் இயங்கிவருகின்றது. ஆகவே, இக்கட்டடத்தைப் புனரமைத்துத் தருமாறு எமது சங்கம் வேண்டிக்கொள்கின்றது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

## யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: வீரசிங்கம் மண்டபம். யாழ். கூட்டுறவுச் சபை
காலம்: 2005.01.27
நேரம்: மு.ப. 10.00 மணி

நிகழ்ச்சிகள்

1. இறை வழிபாடு
2. தலைவர் உரை
3. செயலர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. புதிய நிர்வாகசபைத் தெரிவு
6. நாச அலை (சுனாமி) அனர்த்தத்தால் ஏதிலிகளானோருக்கு நிதி உதவுவது பற்றித் தீர்மானித்தல்
7. பிரேரணைகள்
8. நன்றி உரை
9. இறை வணக்கம்

அங்கத்தவர்களின் தற்போதைய முகவரிகள் தெரியாமையினால் தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பமுடியவில்லை. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க.சண்முகரத்தினம் ச.ஆ.கோபாலமூர்த்தி
தலைவர். (40988) (24-19-17) கௌரவ செயலர்.

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் செல்வமாணிக்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாகலிங்கம் செல்வமாணிக்கம் 17.01.2005 திங்கட்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2005) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10/3, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.* (40985) (24-19-17) தகவல்: செ.சுப்பிரமணியம (மகன்).

## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ் சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

## Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

*January 30ம் இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.*

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch II - 21/01/2005
Batch III - 22/01/2005
Batch IV - 29/01/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம். (Off Stanley Rd.)
0777 222422, 0773151647

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர் தாயகம் தனித்து நிமிரவும் தயார்

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்ப சகல வளங்களையும் ஒன்று திரட்டித் தீவிரமாக உழைக்குமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

அனர்த்தத்தில் சிக்கிய தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்ப முன்வந்திருக்கும் - புலம் பெயர்ந்த மற்றும் உள்நாட்டு - புத்தி ஜீவிகளை நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து உரையாடிய சமயமே இந்த அழைப்பைத் தலைவர் பிரபாகரன் விடுத்திருக்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட இடங்களில் மீள்கட்டுமானம் தொடர்பாக அதிர்ச்சி தரும் அறிவிப்பு ஒன்றை இலங்கைத் தேசத்தின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அதே சமயத்தில்தான் தலைவர் பிரபாகரனின் இந்த அழைப்பும் வந்திருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது.

தேசிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்பும் அரசின் பெரும் திட்டத்தை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

அதில் தமிழர் தாயகத்தின் பெரும்பகுதிகள் - குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமும், வட பகுதியும் - முற்றாகக் கைவிடப்பட்டிருக்கின்றன. அந்தப் பிரதேசங்களில் மீள்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி குமாரதுங்க மூச்சேவிடவில்லை.

உரிமைகளுக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும் மண்டியிடாத போராட்டக்குணம் கொண்டவர்கள் புலிகள். தமது மக்களுக்கு மீள் வாழ்வளிப்பதற்காக மாற்றானிடம் மண்டியிடும் எண்ணம் ஏதும் அவர்களுக்கு கிஞ்சித்தும் கிடையாது. அதுதான் அவர்களது செயற்பாட்டுப் போக்கு; செல் நெறி.

அதனால்தான் ஈழத்தமிழர் உட்பட இலங்கை மக்கள் அனைவருக்கும் என்று சர்வதேச சமூகம் வழங்கும் உதவு தொகையை இலங்கை அரசு, தமிழர்களுக்கு உரிய பங்கை வழங்காமல் சுரண்டும் போதும், அதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டிக் கொண்டு, தங்கள் பணியைத் தம்பாட்டில் முன்னெடுக்கின்றார்கள் புலிகள். சர்வதேச உதவிகளைப் பெறுவதற்காகத் தென்னிலங்கை அரசிடம் கைகட்டி, வாய் பொத்தி, கூனிக்குறுகிக் காத்திருக்கும் போக்கோ, எண்ணமோ புலிகளிடம் இல்லவே இல்லை.

*"சர்வதேச உதவிகளுக்காகக் காத்திருக்காமல் எமது மக்களின் வாழ்க்கையில் எங்களால் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்"* - என்று புத்திஜீவிகள் மத்தியில் தலைவர் பிரபாகரன் கூறியவை இந்தக் கருத்தையே பிரதிபலிக்கின்றன.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற - பொங்கு தமிழ் நிகழ்வின் நான்காம் ஆண்டு நினைவு நிகழச்சியில் -விடுக்கப்பட்ட பிரகடனமும் தலைவர் பிரபாரகனின் இந்தக் கருத்தை அப்படியே அடியொற்றியதுதான்.

*"எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில் எம்மை நாமே கட்டியெழுப்புவோம்"* என்பதே இம்முறை பொங்கு தமிழ்ப் பிரகடனமாக அமைந்தது.

சர்வதேச உதவிகள் எமக்குக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் -

அந்த உதவிகள் தமிழர் தாயகத்தை வந்தடைய இலங்கை அரசு அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும் -

எமது பலத்தில் எமது தாயகத்தை நாமே மீளக் கட்டியெழுப்புவதில் உறுதியாக இருக்கவேண்டும் என்பதையே தமிழரின் பிரதிநிதிகள் வலியுறுத்திச் சுட்டிக் காட்டுகின்றனர்.

*"தமிழரைப் பொறுத்தவரை இந்த சுனாமிப் பேரழிவு இரண்டாவது சுனாமிதான். கடந்த காலத்தில் இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளினால் எமது மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயரவும், சொத்துக்களை இழக்கவும் நேரிட்டது. இது சர்வதேசம் அறியாமலேயே - மௌனமாக - எமது மக்களைச் சிதைத்த முதலாவது சுனாமி. கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தவரையில் இரண்டாவது சுனாமிதான்"* - என்று தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மௌனமாக நடந்த முதலாவது சுனாமி, அழிவுகளைத் தனித்து எதிர்கொண்டு, நிமிர்ந்து நின்ற தமிழர் தாயகம், இப்போதைய சுனாமிப் பேரலை, அழிவுகளையும் அதேமாதிரி எதிர்கொண்டு நிமிரும் - சர்வதேச உதவி கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி.

- இதையே தலைவர் பிரபாகரன் இவ்விடயத்தில் சொல்லாமல் சொல்லும் அம்சமாக நாம் கொள்ள வேண்டும்.

சாம்பல் மேட்டிலிருந்து புதிதாகப் பிறப்பெடுக்கும் பீனிக்ஸ் பறவை போல, யுத்த அழிவுகளுக்கு மத்தியிலும் கிளர்ந்தெழுந்தவர்கள் தமிழர்கள். அழிவுகளுக்கு மத்தியில் இருந்து ஆக்ரோஷமாகக் கிளர்ந்தெழுவது அவர்களுக்கு முடியாத காரியமல்ல; புதிய விடயமுமல்ல. அதற்கான தைரியமும், உறுதியும், ஓர்மமும், மனத்திடமும் அவர்களுக்கு நிறையவே உண்டு.

# புலிகளின் நிவாரணப் பணிகளுக்கு படையினரால் இடையூறு இருக்காது

## மட்டக்களப்பில் படைத்தளபதி உறுதி

மட்டக்களப்பு.ஜன.19

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆற்றிவரும் துயர்துடைப்புப் பணிக்கு இராணுவத்தினர் எந்த இடையூறும் செய்யமாட்டார்கள். அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று மட்டக்களப்பு இராணுவ கட்டளைத் தளபதி கேணல் அமரதுங்க உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் மட்டு. - அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும், மட்டக்களப்பு மாவட்ட படைத் தரப்பினருக்குமிடையே நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே இந்த உறுதியுரை வழங்கப்பட்டது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாக சேவைகள் பொறுப்பாளர், மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர், சுனாமி அனர்த்த நிவாரணப் பணிக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் தயாமோகன், புளியந்தீவுக் கோட்ட அரசியில்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டியிருப்பு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வன், குடும்பிமலைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் புகழன், மட்டு - அம்பாறை அரசியல் துறைச் செயலக இணைப்பாளர் மனோஜ் ஆகியோரும் -

படைத்தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட 233 ஆவது கட்டளைத் தளபதி கேணல் அமரதுங்க, 552 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் வல்கம ஆகியோரும் -

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட தற்காலிகத் தலைவர் எலிசபெத், கண்காணிப்பாளர் பிளைமிங் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-202)

# அமெரிக்கக் கடற்படையின் மருத்துவ அணி மந்திகையில் பணிகளைத் தொடங்கியது

வடமராட்சி.ஜன.19

சுனாமி கடற்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளுக்கென இலங்கை வந்துள்ள அமெரிக்க படையினரில் 25 பேர் கொண்ட கடற்படை மருத்துவ அணியொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

மந்திகை வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்ட இவர்கள் மேலும் பத்து நாள்கள் இங்கு தங்கியிருந்து மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறு சத்திரசிகிச்சை, காயங்களுக்கான சிகிச்சை, வயிற்றோட்டம் மற்றும் தோல் வியாதிகள் உட்பட பல்வேறு நோய்களுக்கும் இவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இக்குழுவினரில் தென் இந்தியா மதுரையை பூர்வீகமாக கொண்ட ஒரு தமிழரும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாக கொண்ட தமிழர் ஒருவரும் அங்கம் வகித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(த-70-173-ரி)

# இலங்கைக்கு வழங்கவுள்ள உதவிகளை சிலகாலம் இடைநிறுத்திவைக்க சர்வதேச நாடுகள் தீர்மானம்

கொழும்பு.ஜன.19

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கைக்கு வழங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள சர்வதேச உதவிகளை சிறிது காலம் இடைநிறுத்தி வைப்பதற்கு உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சுனாமி அனர்த்தம் விளைவித்துள்ள அழிவுகள் தொடர்பான ஆய்வொன்றை இலங்கையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நாடுகள் மேற்கொண்டுள்ள தீர்மானமே அதற்கான முக்கிய காரணமெனவும் தெரியவந்துள்ளது.

சுனாமி ஏற்படுத்தியுள்ள அழிவுகள் தொடர்பாக அரசு தயாரித்துள்ள அறிக்கைக்கு அமைய 15ஆயிரம் கோடி ரூபாவை வழங்குமாறு உதவி வழங்கும் நாடுகளை இலங்கை அரசு கோரியிருந்தது.

ஆனால், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் பெரும்பாலானவை பொருத்தமற்றவையாகக் காணப்படுவதாக இலங்கையில் உள்ள உலக அமைப்புக்களின் நிரந்தரப் பிரதிநிதிகள் உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

அவற்றை விடவும் சுனாமி அனர்த்தம் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகள் அரசு தயாரித்துள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லையென விடுதலைப் புலிகள் அமைப்பும் உதவி வழங்கும் நாடுகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பாகப் பூரணமான ஆய்வொன்று மேற்கொள்ளபட்ட பின்னரே முழு அளவிலான உதவிகளை வழங்க உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (10)

# குப்பைக்கு மூட்டும் தீயினால் பனை வடலிகள் அழிகின்றன

## காக்கைதீவுக் கரையோரத்தில்!

நவாலி.ஜன.19

காக்கைதீவுக் கடற்கரையோரத்தில் கொட்டப்படும் குப்பைகள் தீயிட்டு கொளுத்தப்படுவதனால் அங்கு செழிப்புடன் வளர்த்திருந்த பனை வடலிகள் எரிந்து கருகியுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இந்தப் பகுதியில் பல வருடங்களுக்கு முன்னர் பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் ஆனைக்கோட்டைக் கிராம சேவையாளரின் உதவியுடனும் சில பொது ஸ்தாபனங்களும் இணைந்து காக்கைதீவிலிருந்து கல்லுண்டாய் வரையுள்ள பிரதான வீதியின் இருமருங்கிலும் பனம் விதைகளை நட்டிருந்தனர்.

தற்போது இவை முளைத்து செழித்து வளர்ந்து வரும் வேளையில் இவற்றை அழிப்பது வேதனையைத் தருவதாகவும் இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் பொதுமக்கள் கேட்கின்றனர். (ஜ-100)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு தகவல் சேகரிப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம்.ஜன.19

சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணியின் சுகாதார சேவைகள் ஒருங்கமைப்புச் செயலகம், யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் 300 பேரை ஒருங்கிணைத்துப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார சேவைகளை முன்னெடுப்பதற்கான தகவல் சேகரிப்புப் பயிற்சி நெறியை வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிநபர் ஒவ்வொருவருக்கும் மருத்துவப் பதிவேடுகள் வழங்குவது தொடர்பாகவும் தனிநபர் சுகாதாரம் பேணல், தொற்று நோயை இனங்காணுதல் ஆகியவற்றின் தகவல்களைச் சேகரிப்பது தொடர்பாகவும் இவர்களுக்கு முழுமையாகப் பயிற்சி அளிக்கப்பட்டு களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இச்செயற்பாட்டுக்கு யுனிசெவ், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன அனுசரணை வழங்கிவருகின்றன. (10-12-70)

## இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட நூலில்

# தமிழர் வரலாறுகளுக்கு இருட்டடிப்பு; புத்திஜீவிகள் விசனம் தெரிவிப்பு

வலி.தெற்கு.ஜன.19

இவ்வருடம் முதல் பாடசாலைகளில் ஏழாம் தர மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள வரலாறு பாடநூலில் தமிழ் மக்களுடைய வரலாறுகள் சில இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக புத்திஜீவிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய வரலாறு முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் எல்லாள மன்னனுடைய வாழ்க்கை பற்றிய தரவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையெனவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வருடம் தொடக்கம் ஏழாம் தர மாணவர்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த 'சமூகக்கல்வியும் வரலாறும்' என்ற பாடத்துக்குப் பதிலாக புவியியல், வரலாறு, குடியுரிமைக் கல்வி என்ற பாடங்கள் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தினரால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

வாரத்தில் 2 பாடவேளை புவியியலுக்கும் 2 பாடவேளை வரலாற்றுக்கும் ஒரு பாடவேளை குடியுரிமைக் கல்விக்கும் என நேரசூசியில் ஒதுக்கீடு செய்யுமாறு அறிவித்து இப்பாடங்களுக்கான பாடத்திட்டங்களையும் நிறுவகம் அனுப்பி வைத்துள்ளது.

இப்பாடங்களில் 50 சதவீதம் செய்முறைக் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடங்களுடாக குழுப்பயிற்சி, ஒத்துழைத்துக் கற்றல் என்பன வலியுறுத்தப்படும்.

வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் அரைவாசிக்குக் கூடுதலாக பிரயோக தொழிற்பாடுகளிலேயே மாணவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதனூடாக மாணவர்களின் அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பன சமநிலையாக விருத்தியடையும் எனவும் மாணவர்கள் ஊக்கமுடன் செயற்படுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரலாற்றுப் பாடத்தில் தமிழர் வரலாறு போதியளவு முக்கியத்துவம் கொடுக்கப்படாமையால், உண்மையான தமிழர் வரலாறுகள் இங்குள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள் மூலம் எழுதப்பட்டு அவற்றை உசாத்துணை நூல்களாக மாணவர்களுக்கு வழங்கினால் வரலாற்று நூலில் காணப்படும் குறைபாடுகள் நீக்கப்படும் எனக் கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (10-152)

## நாளை

*தை 07*
*(20.01.2005)*
*வியாழக்கிழமை*
திதி : *நசமி*
*காலை 7.34 வரை*
நட்சத்திரம் : *கார்த்திகை*
*பிற்பகல் 3.03 வரை*
சுபநேரம் : *8.05 - 9.35*
ராகுகாலம்: *2.05 - 3.35*
*(யாவும் பழைய நேரப்படி)*

## உதயவாக்கு

ஒவ்வொரு மனிதனின் இதயமும் நிசப்தமான ஓர் நீதி மன்றமாகத் திகழ்கின்றது.

# ஆசிரிய சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் கஷ்டப் பிரதேச எல்லை வரையறை

கல்வித்துறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆசிரியர்களுக்காக இது வரை கொடுக்கப்பட்டு வந்த கஷ்டப்பிரதேச மேலதிகபடி இந்த ஆண்டு முதல் உயர்த்தப் பட்டு உடனடியாக வழங்கப்பட உள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளமை ஆசிரியர் சமூகத்தினிடையே பெரிதும் வரவேற்கப்பட்ட செயற்பாடாக உள்ளது. இத்தகைய மேலதிகக் கொடுப்பனவுகள் இதுவரை காலமும் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டு வந்தாலும் அவை உரிய முறையில் வழங்கப்பட்டதா என்பதிலும், உரியவர்களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்பதிலும் உறுதித்தன்மை குறைவாகவே உள்ளது.

கல்வித்துறையினரின் பல்வேறுபட்ட கோரிக்கைகளில் இந்த விடயமும் பலகாலமாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக கஷ்டப் பிரதேசப்படி ஆசிரியர்களை கஷ்டப்பிரதேசம் என வரையறுக்கப் பட்ட இடங்களில் வேலை செய்ய ஊக்குவிக்கும் விசேட திட்டமாகவும், ஆசிரியரின் மேலதிக செலவீனத்தை ஈடுசெய்யும் கொடுப்பனவாகவும், கல்வியில் சகல பிரதேச மட்டத்திலும் சமநிலையான அபிவிருத்தியையும் அதற்கான ஆளணி வளத்தைப் பகிர்வதற்காகவும் செயற்படுத்தப்படும் ஒரு செயற்றிட்டம் எனலாம்.

கஷ்டப்பிரதேச மேலதிக கொடுப்பனவு வழங்குவதில் பல்வேறுபட்ட குறைபாடுகள் இருந்தாலும். மிகவும் முக்கிய பிரச்சினையாக கஷ்டப்பிரதேசம், அதிகஷ்டப்பிரதேச வகைப்பாடு எந்தவகையில் தீர்மானிக்கப்படுகின்றது என்பது ஆசிரிய சமூகத்தைப் பொறுத்தவரையில் தெளிவற்ற விடயமாகவே இருந்து வருகின்றது. இவ் வரையறை அல்லது வகைப்பாடு எவ்வாறான முறையில் கணிக்கப்பட்டது என்பதுவும் குறைபாடு உடையதாகவே காணப்படுகிறது.

குறிப்பாக, வடக்கு - கிழக்குப் பிரதேசம் கடந்த இரு தசாப்த காலமாக யுத்த சூழ்நிலை காரணமாக கல்வித்தர நிலையிலும், கல்விக் கட்டமைப்பு ரீதியிலும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றமையைப் பல்வேறு ஆய்வுத்தரவுகள், கணிப்பீட்டு முடிவுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. இத்தகைய. சூழ்நிலையில் எமது பிரதேசப் பகுதியில் ஆளணி வளத்தைப பொறுத்தமட்டில் வசதிவாய்ப்புள்ள பகுதிகளில் மேலதிகமானதாகவும், வசதி வாய்ப்புக்கள் குறைவடைந்த பகுதியில் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பதைக் காணலாம். இதனால் எமது பிரதேச கல்வி அபிவிருத்தி மிகவும் பாதிப்படைவது அல்லது பின்னடைவுக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிறது.

இதனைத் தீர்க்கும் வகையில் ஆளணியினரை ஊக்குவிக்க மேலதிக விசேட கொடுப்பனவுகள் வழங்குவது இன்றியமையாததாகும்.

வடககு - கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேசம், தீவுப் பகுதி, வன்னிப்பிர தேசப் பகுதிகள் மிகவும் பின தங்கிய சமூக பொருளாதார வாழ்வியல் கட்டமைப்பை கொண்டமைந்தன. இப் பகுதிக்குக் கடமைக்குச் சென்றுவரும் ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்கின்றனர் என்பது யதார்த்த பூர்வமான உண்மை.

### கஷ்டப்பிரதேச வகைப்பாடு செய்யப்படும் முறை

ஆசிரிய இடமாற்ற தேசிய கொள்கையின் பிரகாரம் பாடசாலைகளின் தர நிலைப்பாடு சுற்றறிக்கை இல.1998/47,11ஆம் திகதி மார்கழி மாதம் 1998ஆண்டின்படி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு வகைப் படுத்தப்பட்டு புள்ளிவழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கீழ்வரும் அட்டவண்ணை I பாடசாலையில் உள்ள அல்லது கிடைக்கக் கூடிய வளங்களை அடிப்படையாகக்கொண்டு புள்ளி வழங்கப் பட்டு இருப்பதைக்காண முடிகிறது.

**அட்டவணை I**

| பாடசாலையில் கிடைக்கும் வளங்கள் | புள்ளி |
|---|---|
| நீர் வசதி இன்மை | 3 |
| மின்சார இன்மை | 3 |
| ஆசிரியர்களுக்கான விடுதி இன்மை | 5 |
| மலசலகூடம் இன்மை | 5 |
| இருப்பிடம் / தங்குமிடம் இன்மை | 5 |
| மொத்தம் | 21 |

அடுத்து ஆசிரியர்கள் குறித்த பாடசாலைக்குச் சென்றடைவதற்கான போக்குவரத்து வசதி எவ்வகையில் பொருத்தப்பாடுடையதாக உள்ளது என்பதை கொண்டு அட்டவணை II பின வரும் வகையில் புள்ளியிடப்படுகிறது.

**அட்டவணை II**

| போக்குவரத்து | புள்ளி |
|---|---|
| பொது போக்குவரத்து வசதியின்மை | 5 |
| பாதை சீரின்மையால் போக்குவரத்து பாதித்தல் | 3 |
| பாடசாலை போக்குவரத்து தரிப் பிடத்தில் இருந்து 2மைலுக்குள் | 2 |
| பாடசாலை போக்குவரத்து தரிப் பிடத்தில் இருந்து 2 மைலுக்கு அப்பால் | 4 |
| பாடசாலை தரிப்பிடத்துக்கு 5 மைலுக்கு அப்பால் | 8 |
| மொத்தம் | 22 |

பாடசாலை தர நிலையைக் கணிப்பதில் அழிவு நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு புள்ளி வழங்கப்படுகின்றன. அட்டவணை III இததகைய தன்மையை விளக்குவதாக அமைகிறது.

**அட்டவணை III**

| அழிவுகள் | புள்ளி |
|---|---|
| பாடசாலை பயங்கரவாத எல்லைக்குள் இருந்தால் | 10 |
| மிருகங்களின் தாக்கம் உள்ள இடம் | 05 |
| சனநெருக்கமற்ற இடம் | 05 |
| மலைக்கூடான பாதை மூலம் பாடசாலையை அடைதல் | 05 |
| ஆறு,நதி ஊடாக செல்லுதல் | 03 |
| தொற்றுநோய் பிரதேசத்தில் அமைந்திருத்தல் | 03 |
| மொத்தம் | 31 |

பாடசாலைச் சூழல் அமைவிடத்தை பொறுத்தமட்டில் பாடசாலையின் அயல் சமூகமும் முக்கியமான அம்சங்களை கொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் பாடசாலை, தனது தேவையை நிறைவு செய்து கொண்டு சிறப்பாக இயங்கமுடியும் அடுத்து பாடசாலைக்கு கிடைக்கும் பொதுவான வசதிகளை கொண்டு வழங்கப்படும் புள்ளித்திட்டத்தை அட்டவணை IV காட்டுகிறது.

**அட்டவணை IV**

| பொதுவசதிகள் | புள்ளி |
|---|---|
| 5மைலுக்கு அப்பால் சந்தை இருத்தல் | 05 |
| 5மைலுக்கு அப்பால் வைத்திய சாலை இருத்தல் | 04 |
| 5மைலுக்கு அப்பால் வங்கி இருத்தல் | 03 |
| 5மைலுக்கு அப்பால் தபாலகம் இருத்தல் | 03 |
| மகா வித்தியாலயம்/மத்திய மகா வித்தியாலயம் 5 மைலுக்கு அப்பால் இருத்தல் | 02 |
| மொத்தம் | 16 |

சமூக நிலைப்பாட்டிற்கும், சமூகக் காரணிகளுக்கும் பாடசாலைக்கும் இடையில் நெருங்கிய இருவழித்தொடர்புகள் உண்டு. இவற்றினைக் கருத்திற்கொண்டு சமூக சூழ்நிலை அமைபபுக்கள் அமைந்துள்ள தன்மையில் பின்வரும் வகையில் புள்ளிவழங்கல் இடம்பெறுவதை அட்டவணை V காட்டுகிறது.

**அட்டவணை V**

| சமூக சூழல் அமைப்புகள் | புள்ளி |
|---|---|
| வழிபாட்டிடம் 5மைலுக்கு அப்பால் | 01 |
| விளையாட்டு மற்றும் சமூக நல அமைப்பு இன்மை | 02 |
| பொருத்தமில்லாத விருப்பமில்லாத சமூக, பண்பாட்டு நிலை | 02 |
| திரையரங்கு மற்றும் திரை இன்மை | 03 |
| தொடர் ஆசிரியவாண்மை விருத்திக்கான வசதி இன்மை | 03 |
| மொத்தம் | ·11 |

போன்ற பல்வேறுபட்ட காரணிகளின் அடிப்படையல் புள்ளிகள் வழங்கப்பட்டு கல்வி அமைபபில் பின்வரும் வகையில் வகைப்படுத்தப்படுவதைக் காணலாம்.

| வகைப்பாடு | புள்ளி |
|---|---|
| அதிகஷ்டம் | 66 |
| கஷ்டம் | 51-65 |
| வசதியற்ற | 30-50 |
| வசதி | 21-35 |
| ஓரளவு வசதி | 0-20 |

இதன்படி புள்ளி குறைந்த பிரதேசம் ஓரளவு வசதியடைந்த பிரதேசமாகவும், புள்ளி கூடிய பிரதேசம் அதிகஷ்டப் பிரதேசமாகவும் உள்ளடங்குவதைக் காணமுடிகிறது.

இத்தகைய தன்மைகளை நிர்ணயித்த வகையிலேயே கஷ்டப் பிரதேச மேலதிக கொடுபபனவு இடம்பெறவுள்ளது என அரசினால் கூறப்பட்டாலும் இத்தகைய தன்மையைப் பேணுவது தொடர்பான உரிய ஒழுங்குமுறை இடம் பெறாமை குறைபாடுடையதாகவே கருதப்படுகிறது. உண்மையாகவே பல்வேறு வசதியீனங்களைக் கருத்தில் கொள்ளாது இயங்குகின்ற பல பாடசாலைகள் எமது பிரதேசத்தில் உண்டு. இங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கான மேலதிகபடி வழங்கப்படுகிறதா என்பது

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரியர்,
தீவகக் கல்வி வலயம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

**ஒத்துமாறல்**

யாழ்நகரத்தில் நிர்வாகத்துறையில் தெரிவு செய்யப்பட்ட கலைப்பட்டதாரி ஒருவர், யாழ். மாவட்டத்தில் அப்பகுதியிலும் நியமனம் பெற்ற கலைப்பீடப் பட்டதாரி ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.
தொடர்பு: T.P.: 0602 213240
(மாலை 6 மணிமுதல்) (40993

**மாடிக்கட்டடம் வாடகைக்கு**

சுன்னாகம் நகரப் பகுதிக்கு அண்மையில் கே.கே.எஸ். வீதியில் அமைந்த இருமாடிக் கட்டடம் (3600 சதுரஅடி) வாடகைக்கு விடப்படும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: பொ.நடேசன்
இல. 136. கே.கே.எஸ். வீதி.
சுன்னாகம்.
(40949) (24-42-11-15)

**ஒத்துமாறல்**

Ministry of Agricultural Marketing Development and Hindu Affairs, Colombo இல் Vocational Training இற்கு நியமனம் பெற்ற ஒருவர் யாழ். மாவட்டத்தில் நிர்வாகத்துறை அல்லது ஆசிரியர் துறையில் நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: T.P.: 021 4590167 (40981)

### 'பேர்ள்' தொழில்நுட்ப நிறுவனப் பரீட்சை வெள்ளிக்கிழமை

யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'பேர்ள்' தொழில்நுட்ப நிறுவனத்தின் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அதன் நிர்வாகி அறிவித்துள்ளார்.

நேற்றைய உதயன் பத்திரிகையில் இப் பரீட்சை 31ஆம் திகதி நடைபெறும் என்று பிரசுரமாகியிருந்தது தவறாகும். (10)

**மெகா புலமைப் பரிசில் பரீட்சை-2005**

File Edit View Favorites Tools Help
Back Search Folders
Address Pearl Technologies (Pvt) Ltd. #561, Kasthuriyar Road, Jaffna. Sri Lanka. Tel: (94) 0214591267 Go

DAC Diploma In Office Automation
DTP Diploma In Desktop Publishing
DHE Diploma In Hardware Engineering
ECOM Electronic Commerce
DWD Diploma In Web Designing
DCP Diploma In Computer Programming

**கொம்பியூட்டர் கற்கை நெறிகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை**

யாழ். குடாநாட்டில் முதன்முறையாக நடத்தும் இப்புலமைப் பரிசில் பரீட்சையில் பங்குபற்றி 2005 கல்வி ஆண்டிற்கான சமகால தொழில்சார் கணனி கற்கை நெறிகளில் ஒன்றை தெரிவுசெய்து முறையே 40%, 50%, 60%, 75%, மற்றும் 100% வரையிலான சிறப்புப் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகள் அனைத்தும் உயர்கல்வி நிலையத்தின் அங்கீகாரம் பெற்றவை (College of malasian KOLEJ WIT).

**இத்திட்டத்தில் யார் பங்குபற்றாம்?**
மொழி, வயதெல்லை, முன் அனுபவம் தராதரம் என்ற பாகுபாடின்றி கொம்பியூட்டர் கல்வியில் ஆர்வமுடைய அனைவருக்கும் மற்றும் குறிப்பாக இம்முறை O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிப்பதுடன் சிறப்புக் கட்டணக் கழிவையும் வழங்குவதே இப்புலமைப்பரிசில் திட்டத்தின் உயரிய நோக்கமாகும்.

**இலவச பரீட்சைகள்**
21.01.2005 நடைபெறும் இப்புலமைப்பரிசில் பரீட்சை பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக தமிழ் மொழியில் நடைபெறும்.

**இலவச அனுமதி**
இப்புலமைப்பரிசில் பரீட்சை முற்றிலும் இலவசம். யாழ்நகரில் உள்ள எமது பயிற்சி நிலையத்தில் இலவச அனுமதி அட்டைகளையும் பரீட்சை பற்றிய விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**Pearl Technologies (Pvt) Ltd.**
Pearl Technologies
#561, Kasthuriyar Road, Jaffna. Sri Lanka.
Tel: (94) 214591267
Microsoft Windows Professional
(39944)

### உதவிப் பொருள்கள்

வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையம் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம், வடலியடைப்பு, சங்கானை மேற்கு சன சமூக நிலையம் ஆகியன இணைந்து கடந்த சுனாமி கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவுப்பொருள்கள், உடுப்புகள் ஆகியவற்றை வழங்கியுள்ளன. இதே வேளை, முல்லைத் தீவுப் பகுதியில் பாதிக கப்பட்ட மக்களுக்கும் இவை விநியோகிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(த-13)

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தில் சகஸ்ர சங்காபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(3-204)

# இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தால் அனானின் வடக்கு விஜயத்தைத் தடுத்திருக்கவே முடியாதாம்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ கூறுகிறார்

கொழும்பு,ஜன.19

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டிருந்தால் அரசு வாலைச் சுருட்டிக்கொண்டு மூலையில் இருந்திருக்க வேண்டிய நிலை இன்று உருவாகியிருக்கும். ஐ.நா. செயலாளர் கொபி அனான் வன்னி செல்வதை அரசால் தடுத்திருக்க முடியாது.

இப்படிக் கூறுகிறார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

கடந்த சனிக்கிழமை ஜே.வி.பியினரின் சுனாமி அனர்த்த நிவாரணச் செயலணியின் 2ஆவது கூட்டம் அம்பாறையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய சோமவன்ஸ அமரசிங்க இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்குவதை நாம் ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வந்தோம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்குவதற்கு ஜனாதிபதியும் முன்வரவில்லை. அதற்காக அவரைப் பாராட்டவேண்டும். பெரும்பாலானவர்களின் எதிர்ப்பின் காரணமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை புலிகளிடம் வழங்கப்படவில்லை. அப்படி வழங்கியிருந்தால், வெளிநாட்டு நிதியுதவிகளும், நிவாரண உதவிகளும் புலிகளிடமே நேரடியாகச் சென்று சேர்ந்திருக்கும். அரசைவிட புலிகள் பலம் பெற்றிருப்பார்கள்.

ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்திருப்பார். புலிகளின் பிரதேசம் தனிநாட்டுக்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும். இப்படியான நிலை உருவாகிவிடக்கூடாது என்பதற்காகவே நாம் ஆரம்பகாலம் முதல் போராடி வருகிறோம்.

சுனாமிப் பேரலை இலங்கைக் கரையோரப் பிரதேசங்களைக் காவுகொண்டபோது அரச உயரதிகாரிகள் உட்படப் பெரும்பாலானோர் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஜே.வி.பியினராகிய நாம் மக்களோடு மக்களாகப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தோம். இதன் காரணமாகவே உடனடியாகக் களத்தில் இறங்கி எம்மால் மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபடமுடிந்தது. 24 மணித்தியாலங்களில் எமது கட்சி அலுவலகங்கள் மூலம் சேவையாற்றக் கூடியதாக இருந்தது. உடனடியாக எமது உறுப்பினர்களில் ஏழாயிரம் பேரைப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பினோம். இன்று பத்தாயிரம் பேர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவையாற்றுகின்றனர்.

அம்பாறையில் நானூறுக்கும் மேற்பட்ட எமது உறுப்பினர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருக்கோயில் பாலத்தை எமது ஒத்துழைப்பு இல்லாவிட்டால் உடனடியாகத் திருத்தி அமைக்க முடிந்திருக்காது என அரச அதிகாரிகள் கூறினர். மட்டக்களப்பு மாவட்டம் உட்பட கிழக்கில் எமது உறுப்பினர்கள் ஆயிரத்து 500 பேர் பணியாற்றுகின்றனர். நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும் - என்றார் அவர். (க-3)

### சுனாமி பாதித்த தமது மக்களுக்கான

# புலிகளின் சேவைக்கு ஜனாதிபதி பாராட்டு

கொழும்பு,ஜன.19

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமது மக்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆற்றிவரும் சேவைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மனம் விட்டுப் பாராட்டியுள்ளார். கடந்த ஞாயிறன்று நாரஹென்பிட்டியவில் நடைபெற்ற பொது வைபவம் ஒன்றிலேயே இப்படிப் பாராட்டினார்.

நாரஹென்பிட்டியவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி, தொழில் பயிற்சிகள், தொழில்நுட்பத்துறைகள் அமைச்சுக்கான கட்டடத்தை ஜனாதிபதி சந்திரிகா சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். அங்கு உரையாற்றியபோதே ஜனாதிபதி புலிகளைப் பாராட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சுனாமி பேரலை நாட்டில் ஒரு ஐக்கிய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டைக்கட்டி எழுப்பும் அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவையும் வழங்கி வருகின்றார். இதனை நான் வரவேற்கின்றேன். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நமது மக்களுக்கு 40 நாடுகள் உதவிகளை வழங்கி உள்ளன. மேலும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

அரசின் மீளமைப்புப் பணிகளும் நிவாரண உதவிகளும் இனம், பிரதேச பாகுபாடுகள் இன்றித் தொடரும்.

வீடு, வாசல்களை இழந்தவர்கள் அனைவருக்கும் அரச செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அவர்களுடைய வாழ்க்கையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டியது அரசின் கடமை. இதில் எந்த விதமான மோசடிகளும் இடம்பெறுவதை என்னால் அனுமதிக்க முடியாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த 26ஆம் திகதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் மீட்புப் பணிகளும், நிவாரணப் பணிகளும் பெரிதும் பாராட்டத்தக்கவை. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ஏனைய பிரதேசங்களைப் போன்று புலிகளின்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும் சிறந்தமுறையில் அபிவிருத்தி செய்யப்படும்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் மாகாண ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும்.

முதற்கட்டமாகத் தென்மாகாணத்திற்கான திட்டம் இன்று அம்பாந்தோட்டையில் அடித்தளமிட்டு ஆரம்பிக்கப்படும். நாளை கல்முனையில் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்படும். அதேவேளை, பாதை அபிவிருத்தி, நகர அபிவிருத்திப் பணிகளுடன் புதிய கிராமங்களும் உருவாக்கப்படும் என ஜனாதிபதி அங்கு கூறினார். (க-3)

# முறைசாரா கல்விப் பிரிவின் இறுதிப் பரீட்சை

தென்மராட்சி,ஜன.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் முறைசாராக் கல்விநெறியின் இறுதிப் பரீட்சைகள் நாளைமறுதினமும், எதிர்வரும் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கணனிப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டோருக்கான பரீட்சை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் -

வரணி மகாவித்தியாலயத்தில் உடை அமைத்தல், சிகை அலங்கரிப்பு வகுப்புகளில் கலந்துகொண்டோருக்கான பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டோருக்கான பரீட்சை எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் அதே பாடசாலையிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117-202)

# இந்திய நிவாரணப் பொருள்கள் முல்லைத்தீவு மக்களுக்கு விநியோகம்

வடமராட்சி,ஜன.19

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென இந்தியத் தூதரால் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரிடம் கையளிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களில் ஒரு தொகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 11ஆம் திகதி வருகைதந்த இந்தியத் தூதுவர் நிருபமாராவ், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 19 தொன் பால்மா, மருந்து மற்றும் உணவுப் பொருள்களை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரிடம் கையளித்திருந்தார்.

அந்தப் பொருள்களில ஒரு தொகுதியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தாவும் எடுத்துச்சென்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியுளள மக்களுக்கு வழங்கியுள்ளனர்.(3-203-173)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கொரிய நாட்டுப் போதனாசிரியர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் எந்திரவியல் கற்கைநெறி விரிவுரைகளை நடத்துவதற்குக் கொரிய நாட்டுப் போதனாசிரியர்கள் முன்வந்துள்ளார்கள்.

இதன் முதற்கட்டமாகப் போதனாசிரியர்கள் இருவர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தமது பணியை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்மொழியில் பயிற்றப்பட்ட இவர்கள் தமிழ் மொழியிலேயே விரிவுரையை வழங்கவுள்ளனர். மேலும் 10 போதனாசிரியர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் வேதனமின்றிப் பணியாற்றுவதற்கு அடுத்தவாரமளவில் யாழ். வரவிருக்கின்றனர்.

தற்கால விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கற்கைநெறிகளை நடத்த உதவ வேண்டுமென தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கொரியத் தூதுவரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, தூதுவர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இதன்மூலம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பொறியியல் துறை, இலத்திரனியல் துறை ஆகியவற்றின் சர்வதேச தரத்திலான தொழில்நுட்பக் கல்வியைப் பெறமுடியுமென தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (8-12)

# வாசகர் திருமுகம்

## சுகாதாரத் தொண்டர்களின் அவல நிலை

பல ஆண்டு காலமாக நாம் சுகாதாரத் தொண்டர்களாக சேவைசெய்து வருகின்றோம். மக்கள் சேவை மகேசன் சேவை என்பதுபோல் நாம் பல நெருக்கடிகளின் மத்தியிலும் சேவைசெய்துவந்தோம். கடந்தகாலப் போர்க்காலத்திலும்சரி மழை வெள்ள நெருக்கடியிலும்சரி பல தொற்றுநோய்கள் மத்தியிலும்சரி எம்மைத் தியாகஞ்செய்து சேவைசெய்து வந்தோம். எம்மை என்றோ ஒருநாள் உள்வாங்குவார்கள் என்ற நம்பிக்கையில் சிலதொண்டர்கள் 1988ஆம் ஆண்டுதொடக்கம் இன்றுவரை தமது சேவையைத் தொடர்ந்துவருகின்றனர். பல வைத்தியசாலைகளின் ஆளணிப் பற்றாக்குறையைக்கூட இந்தத் தொண்டர்கள் நிவர்த்தி செய்கின்றனர். தொண்டர் ஆசிரியர்களைப் பரீட்சை இன்றி உள்வாங்குவதுபோல எம்மையும் உள்வாங்கலாம் அல்லவா? எம்மை உள்வாங்குவது சாதாரண சிற்றூழியர்கள் ஆகத்தான். சிற்றூழியருக்கு ஏன் எழுத்துப்பரீட்சை? அனுபவரீதியிலும் தகுதிஅடிப்படையிலும் எம்மை உள்வாங்கலாம்தானே எனத் தொண்டர்சார்பில் மனம் நொந்தும் வெந்தும் வேதனைகள் மத்தியிலும் உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

**பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள்.**

## ஆங்கிலத்தின் நிலை தமிழிற்கும் வந்துவிடும்!

வளர்ந்துவரும் தலைமுறையினரிடையே ஆங்கில அறிவு குறைந்து வருவது பற்றியும் அதனைச் சீர்செய்வதற்கான வழிவகைகள் பற்றியும் அடிக்கடி பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாவதைக் காண்கிறோம். இதேநேரம் தமிழ்மொழியைக் கையாள்வது எவ்வளவுதூரம் சரியாக நடைபெறுகிறது என்பதை நாம் கவனிக்கத் தவறுகிறோம். மாணவர்களின் அப்பியாசப் புத்தகங்கள் தொடக்கம் நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் வரை ஏன் சிலசமயங்களில் பத்திரிகைகளில்கூட பல பிழைகள் காணக்கூடியதாகவுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய வழிவகைகளைக் கையாளாதுவிட்டால் காலப்போக்கில் ஆங்கிலத்தின் நிலைமை தமிழுக்கும் ஏற்படவாய்ப்புண்டு. ஆங்கிலம் இரண்டாவது மொழி என்ற காரணத்தைச் சொல்லிச் சமாளித்தாலும் தாய் மொழியான தமிழுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்கு எக் காரணமும் கற்பிக்க வாய்ப்பில்லை. மொழிகளைக் கற்பிக்கும்போது ஆரம்ப வகுப்புக்களில் போதியகவனம் எடுத்தால் மொழியில் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம் அல்லவா?

*கொக்குவில்.* **வை.சந்திரபாலன்.**

## உறுதிகளுக்கு முத்திரைக் கட்டணம்

காணி உறுதிகளுக்கு முத்திரைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லையென மக்கள் மத்தியில் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. ஆனால், ஒரு சில நொத்தாரிசுமார்கள் தற்போது முத்திரைக் கட்டணம் அறவீடு செய்து உறுதிகள் நிறைவேற்றுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இது விடயமாகக் காணிப் பதிவகத்தில் விளக்கம் கேட்கும்போது நீங்கள் உங்கள் நொத்தாரிசு சொல்கிறவாறு செயற்படுங்கள் என்ற நழுவல் பதிலையே அவர்களிடமிருந்து எதிர்பார்க்கமுடிகிறது. எனவே, இது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையென்பதையும் தீர்க்கப்படாத நீண்டகாலப் பிரச்சினையென்பதையும் அவர்களின் பதில் கோடு காட்டிநிற்கிறது.

இந்த முத்திரைக் கட்டணப் பிரச்சினை 2002.05.01 தொடக்கம் தொடர்கதையாக இருந்து வருகிறதென்றும் - இப்பிரச்சினை வடக்கு - கிழக்கு மாகாணம் மட்டும் சம்பந்தப்பட்டதொன்றென்றும் - கடந்த கால பத்திரிகைகள் வாயிலாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நொத்தாரிசுமார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையிற் செயற்பட்டுக்கொண்டிருப்பது ஆரோக்கியமான செயல் என்று எவரும் ஏற்றுக்கொள்ளமுடியாத அதேவேளை, உறுதிகளுக்கு முத்திரையொட்டாவிடின் அவற்றின் செல்லுபடித் தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்ச உணர்வு பொதுமக்கள் மத்தியில் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பின்னர், அதாவது காலக்கிரமத்தில் முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டியேற்படும் பட்சத்தில் அச்சமயம் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வது அசாத்தியமாகலாம் என்ற அச்ச உணர்வு ஒரு சில நொத்தாரிசுமார் மத்தியில் நிலவுவதாலேயே அவர்கள் தற்பாது காப்பாகச் செயற்படுகின்றனர் என்றும் கொள்ளவேண்டியிருக்கின்றது.

அரசு இது விடயத்தில் ஏனோ தானோ என்று செயற்படுவது வருந்தத்தக்கது. உச்ச நீதிமன்றுக்காவது இவ்விடயத்தை எடுத்துச்சென்று தீர்வு எட்டக்கூடிய வாய்ப்பிருந்தும் பூனைக்கு மணிகட்டுவது யார்? என்ற நிலை பொதுமக்கள் மத்தியில் நிலவுகின்றது.

உறுதிகளுக்கு முத்திரை ஒட்டுவது அவசியமா அல்லது அவசியமில்லையா என்ற வினாவுக்கு விடைகாண்பது காலத்தின் தேவையாகும். இந்த விடை மக்களினதும் நொத்தாரிசுமார்களினதும் தளம்பல் நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும். இந்த விடயத்தை மக்களுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விளக்குவார்களா?

**நிதர்சனன்.**

வெளிவந்து விட்டது!
வெளிவந்து விட்டது!

இமயம்

மாணவர்கள் படிப்பதற்கும், நடிப்பதற்கும்
பொருத்தமான பதினொரு நவீன நாடகங்கள்



400 நாடகங்கள் எழுதிய
கலாபூசணம்
அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளையின்
பத்தொன்பதாவது நூல்.

(40856)(39-42-17-15)


## திருக்கடலூரில் மறியல் போர்

திருகோணமலை,ஜன.19

திருக்கடலூர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கேணியடி பிரதேச மக்கள் நேற்றுமுன தினம் காலை 10 மணியளவில் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு ஒழுங்காக நிவாரண உதவிகள் கிடைப்பதில்லை என்றும் கிராம உத்தியோகத்தர் தமது பகுதிகளை ஒழுங்காகப் பார்வையிடவில்லை என்றும் கூறியே நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் சேதங்களைப் பதிவுசெய்யும் விண்ணப்பப்படிவம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது எனவும், அவை சிலருக்கு மட்டும் விநியோகிக்கப்பட்டன எனவும் ஏனையோருக்கு வழங்கப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கூறினர்.

(க-3)

## ஜப்பானிய எம்.பி. இலங்கை வருகை

கொழும்பு,ஜன.19

ஜப்பான் ஆளும் கட்சியான ஜனநாயக நடுநிலை கட்சியின் வெளிநாட்டு விவகாரப் பிரிவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனாகோ துஷியா மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்து சேர்ந்தார்.

அரச உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் அவர், கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்துக்கும் நேரில் செல்லவுள்ளார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து கடல் அனர்த்தத்தின் பின்னரான தற்போதைய நிலை குறித்தும் ஜப்பான் வழங்கும் உதவிகள் குறித்தும் அவர் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-3)

## சைவ நெறித்தேர்வு மார்ச் மாதத்தில்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான சைவநெறித் தேர்வை நடத்தவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடத்தப்படவுள்ள இப்பரீட்சைகளுக்குத் தோற்றவிரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி கேட்டுள்ளார்.

(3-204)


இன்னும் 4 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
23-01-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி
• நெல்லியடி • கிளிநொச்சி


# நன்றிகள் பல



சென்ற 19.12.2004 அன்று
காலமாகிய

**கிருஷ்ணன் தர்மலிங்கம்**

எங்கள் குடும்பவிளக்கு இறையடி சேர்ந்த போது உடன்வந்து உதவிய உறவினர், அயலவர் ஆகியோருக்கும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை வைத்தியர்கள், தாதியஉத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும், இறுதிக்கிரியைகளின் போது சகல வழிகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்து ஆறுதல் கூறிய உறவுகளுக்கும், கடிதமூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியோருக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்டவர்களுக்கும், அஞ்சலி நிகழ்வுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கிய யா/ஞானாசாரியார் கல்லூரி, சுடர்ஒளி சனசமூக நிலையத்தினருக்கும், நினைவு மலராக்கத்தில் அனைத்து வழிகளிலும் பங்குபற்றிய அனைவருக்கும், நேற்றைய (18.01.2005) அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்கு கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.
19.01.2005

– குடும்பத்தினர்.

(40876)(42-17-15)


UNIT

UNI MULTIMED STA Internet Ready Rs. 49,900/-
UNI MULTIMED PRO Internet Ready Rs. 57,000/-
UNI ENH Copier Internet Ready Rs. 59,500/-
UNI DEV EXPERT Rs. 63,900/-

கொழும்பு விலைக்கே யாழில்
எமது பிரத்தியேக 3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள்

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

Universal Technology,
Station Road,
Chunnakam.


# நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள்

| 25ஆம் வருடம் | 21ஆம் வருடம் | முதலாம் வருடம் |
|---|---|---|
|  |  |  |
| அமரர் கஸ்பார் செபஸ்தி | அமரர் செபஸ்தி மேரிப்பிள்ளை | அமரர் செபஸ்தி ஞானம்மா |
| பிறப்பு 1891 இறப்பு 1980 | பிறப்பு 1894 இறப்பு 1984 | பிறப்பு 11.04.1916 இறப்பு 20.01.2004 |

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

உயிர்ப்பும் உயிருமாகிய இறைவா! மரணத்தால் எம்மை விட்டுப் பிரிந்து உமது பாதம் சரணடைந்த உமது அடியார்களை என்றும் உமது இன்ப சந்நிதானத்தில் வாழ அருள்புரிந்தருள வேண்டுகின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 21.01.2005 வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு மன்றாடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

21,மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம். திருப்பலியின் பின்பு வீட்டுக்கு வரவும். (40750)(39-15-17-42) செ.ஆசீர்வாதம் குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை

பிறப்பு 16 – 09 – 1951



இறப்பு 19 . 01 . 2004

**அமரர் தம்பியப்பா தருமலிங்கம்**

(அதிபர், யா/மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை,
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

என்று மறந்தோம்? எப்படித்தான் மறப்போம்?
இன்று ஓராண்டு உருண்டு வந்து நிற்கிறது
துன்பம் தணியவில்லை தலைமகனே!
தென்னாடுடைய சிவன் கழற்கீழ் உறங்கச் சென்றாயே!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு அம்மா த.நாகம்மா, சகோதரர்கள் நாகலட்சுமி, தவராசா, ஜெயலட்சுமி, இராஜலட்சுமி, சாந்தசொரூபன், மைத்துன மைத்துனிகள், கிருஸ்ணநாதன், நாகரட்ணம், சற்குணராசா, லோகேஸ்வரன், பிறேம்குமார்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(France)

(40876)(42-15-17)


பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
• நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
• இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic

# புலிகள் தலைமையில் நிவாரணப் பணி

# செவ்வனே நடப்பதாக மக்கள் திருப்தி

**சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் இழப்புக்களைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு ஆறுதல் கூறவுமென்ற போர்வையில் தென்பகுதி அரசியல் தலைவர்கள் பலர் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கில் - தமிழ் மக்களது ஆதரவைப் பெற்றுத் தமது வாக்கு வங்கிகளை நிரப்பும் நோக்கில் - விழுந்தடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குப் பறந்து வந்ததையும், நலிவுற்ற நிலையிலும், தன்மானத்தை இழக்க விரும்பாத தமிழ் மக்கள் அவர்களது நோக்கத்தை இனங்கண்டு வெகுண்டெழுந்து எதிர்த்தமையையும் வாசகர்கள் நன்கறிவர்.**

**அந்த வகையில் யாழ்.மாவட்டத்துக்கேற்பட்ட பேரழிவை நேரில்கண்டு சென்று அது குறித்த உண்மை நிலையை வெளிப்படுத்தும் நோக்கில் இங்கு வந்து நிலைமையை நேரில் கண்டுணர்ந்த ஊடகவியலாளர் தினித் சிந்தக கருணாரத்ன தனது அவதானிப்புக் குறித்து லங்காதீப பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தைக் கீழே தருகின்றோம்.**

## 'லங்காதீப' கட்டுரையாளர் நேரில் கண்டு எழுதுகிறார்

நிரந்தரப் போர் நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்குப் பொதுமக்களுக்கான விமான சேவையில் இணைந்து பயணம் செய்யும் வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்தது.

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் விமானத்தில் எம்முடன் பயணம் மேற்கொண்ட வயதான தமிழ் மூதாட்டியொருவர் எனது இருக்கைக்கு அருகில் வந்தார். கனிவான பார்வையுடனும் புன்சிரிப்புடனும் கையிலிருந்த பார்சலில் இருந்த பொருளொன்றினை எனக்கு விநியோகித்தார். தமிழ் மக்கள் விரும்பிச் சுவைக்கும் ருசிமிக்க பலகார வகையொன்றே அது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தமது சொந்த ஊருக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியால், தமது உறவினர்களுக்கெனத் தாம் தயாரித்து எடுத்துச் சென்ற பலகார வகையை அன்று அவ் விமானத்தில் பயணித்த சகல பயணிகளுக்கும் வழங்கித் திருப்தியடைந்த அம்மூதாட்டி, இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றார். அவ்வித சுபமுகூர்த்தத்துடன் -

அன்று ஆரம்பமான யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையேயான பொதுமக்களது பிரயாண வசதி இன்று வரை தடங்கலின்றித் தொடர்வது அண்மையில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கான பயணத்துக்காக நான விமானத்தில் ஏறியவேளை எனது நினைவில் நிழலாடியது.

தென்பகுதி, வடபகுதியென்ற பேதமின்றி, நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்கள் பலரின் உயிர், உடைமைகளுக்குப் பெரும் அனர்த்தம் விளைவித்த சுனாமி கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த தமது உறவுகளின் நிலை குறித்துத் தெரிந்து கொள்ளவுமெனப் பல தரப்பட்ட மனக்கவலைகளுடன் கனத்த மனதுடன் பயணத்தை ஆரம்பித்த பயணிகளில் நானும் ஒருவனாக பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

பயணிகள் எவரது முகத்திலும் எனது முன்னைய யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின்போது கண்ட உற்சாகத்தையோ மகிழ்ச்சியையோ இந்தத் தடவை சிறிதளவேனும் காணமுடியவில்லை. அதே போன்று தமது உறவினர்களுக்கெனத் தயாரித்து எடுத்துச் சென்ற பலகார வகையை எமக்கெல்லாம் பங்கிட்டளித்த வயதான மூதாட்டி போன்ற எவரும்கூட எம்முடன் இந்தத் தடவை பயணம் மேற்கொள்ளவில்லை. இன, மத பேதமின்றி சுனாமி கடற்கொந்தளிப்பு தென்பகுதியைப் போன்று வடபகுதியிலும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருந்தமையை சக பயணிகளின் உணர்வுகள் மூலம் எடைபோட முடிந்தது

'சுனாமி' கடற்கொந்தளிப்புக் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசமே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அனர்த்தம் காரணமாக அப்பிரதேசத்தில் மட்டும் 780 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், காணாமற்போனவர்களாகக் கருதப்படுபவர்களது எண்ணிக்கையுடன் சேர்த்து வடமராட்சிப் பிரதேசத்தில் மாத்திரம் 2ஆயிரத்து 500 பேர் வரையானவர்களை இச்சுனாமி கடற்கொந்தளிப்புக் காவுகொண்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இந்த அனர்த்தம் காரணமாக ஆயிரத்து 218 பேர் கடும் காயங்களுக்கு உள்ளானதுடன் பொதுமக்கள் 48ஆயிரத்து 729 பேர் தமது சொந்த வதிவிடங்களை இழந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

1987ஆம் ஆண்டில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் வாழ்ந்த 2 ஆயிரத்து 200 பேர் வரை உயிரிழக்க நேர்ந்ததாகக் கூறப்பட்டது. இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து முற்றாக விடுபடுமுன்னர் தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தப் பாதிப்புக் காரணமாக வடமராட்சிப் பகுதிவாழ் பொதுமக்கள் உயரத்தூக்கி நாலு சுற்றுச் சுற்றி நிலத்தில் வீசப்பட்ட நிலையைப் போன்றதொரு சிரம நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் கொழும்பின் மொரட்டுவ பகுதியில் தொடங்கி வடக்குக் கரையான பருத்தித்துறை வரையான நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் கடற்கொந்தளிப்பினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. பிரதேச ரீதியில் காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நகரங்கள் சுனாமியால் முற்றுமுழுதாக அழிவுண்டுள்ளன. வடமராட்சி இராணுவ நடவடிக்கை உட்பட இருபது வருடகால யுத்தத்தில் பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்த யாழ்ப்பாணப் பொதுமக்கள் மீண்டும் தலை நிமிர ஆரம்பித்தவேளையில், அண்மையில் இடம்பெற்ற 'சுனாமி' அனர்த்தம் காரணமாக மீண்டுமொரு பாரிய



அழிவுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. அவர்களது அண்மைய அழிவு குறித்த பூரணமான மதிப்பீட்டு விவரங்கள் இதுவரை பூர்த்தியடையவில்லை. ஆனால், மேலும் குறிப்பிட்டதொரு காலம் வரை யாழ்ப்பாணப் பொதுமக்களைத் தலையெடுக்க அனுமதிப்பதில்லையென இக்கடல் அனர்த்தம் முடிவெடுத்துள்ளதாகக் கருத வேண்டியுள்ளது.

இக்கடற்கொந்தளிப்புக் காரணமாக யாழ்.மாவட்டப் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள், உயிரிழப்புக்கள் குறித்த விவரங்கள் ஊடகங்களால் திருப்தியான அளவில் வெளிக்கொணரப்படவில்லையென வடமராட்சிப் பகுதியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் பொது அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் 'சுனாமி' அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்துச் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த எம்மால் இப்பேரழிவு இடம்பெற்றுப் பல நாள்கள் கழிந்துவிட்ட நிலையிலும், இப்பகுதிக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாக உணர முடிந்தது.

இச்சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் மட்டும் தமக்குக் கிடைக்காது போயிருக்குமானால், தாம் பசியாலும், தாகத்தாலும் இறக்க நேரிட்டிருக்குமென வடமராட்சிப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பிரதேசத்தின் தொண்டமானாறு தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரப் பிரதேசங்கள் மட்டுமே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. வடமராட்சி கிழக்கில்



நாகர்கோவிலிலிருந்து கட்டைக்காடு வரையான கரையோரப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

சுனாமி கடற்கொந்தளிப்பையடுத்து தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மட்டுமன்றி, அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குமான நிவாரணப் பணிகளை விடுதலைப் புலிகள் முன்னின்று சிறப்பான ஒழுங்கமைப்பில் மேற்கொள்வதை அப்பகுதிகளைப் பார்வையிடச் சென்ற எம்மால் அவதானிக்க முடிந்தது. அவர்களது பணி குறித்து பாதிக்கப்பட்ட சகல பொதுமக்களும் திருப்தியடைந்தவர்களாகக் காணப்பட்டமையையும் நாம் அவதானித்தோம்.

'சுனாமி' கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்களுக்கான புனருத்தான நடவடிக்கைகளைக் கையாளவென முதலில் விடுதலைப் புலிகளால் செயலணியொன்று உருவாக்கப்பட்டது. இச்செயலணியின் பிரதான இணைப்புக் காரியாலயம் நெல்லியடியில் இயங்கிவருகின்றது. சீ.வி.கே. சிவஞானம் என்பவர் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்



வகையிலும், எஸ்பாலையா என்பவர் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் இக்காரியாலயத்தில் பணியாற்றி வருகின்றனர்.

அதேவேளை - இறைமையுள்ள இலங்கை அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் தென்பகுதியில் இயங்கும் அகதி முகாம்களில் ஊழல்கள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டப்படுகிறது. அவ்வித குற்றச்சாட்டுக்கள் எதுவும் எழாத வகையில் வடமராட்சிப் பகுதியிலுள்ள அகதி முகாம்கள் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நிவாரணப் பொருள்கள் கையாடல், சீரற்ற விநியோக நடைமுறை போன்ற குற்றச்சாட்டுக்கள் எதுவும் வடபகுதியில் உள்ள அகதி முகாம்களில் இடம்பெறுவதாக நாம் கேள்விப்படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நியாயமான முறையில் பாரபட்சமின்றி உதவிப் பொருள்களை விநியோகிப்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் குறிப்பிடாது விட்டால் அது நியாய, மற்ற தொன்றாகும்.

வடமராட்சிப் பகுதியில் தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொளளாது தவிர்க்க விரும்பியிருந்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு அதற்கான காரணங்கள் பலவற்றை முன்வைத்திருக்க முடியும்.

ஆனால், விடுதலைப் புலிகள் அமைபபு பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான நிவாரணப் பணிகளில் எவ்வித பாரபட்சமும் காட்டாது பாதிக்கப்பட்ட சகல பொதுமக்களுக்குமான நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருவதை எம்மால் நன்கு உணரமுடிந்தது.

வடபகுதியில் இவ்விதம் நியாயமாகவும், துரிதமாகவும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் தென்பகுதி அரசியல் பிரமுகரான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாணத்துக்கான பயணத்துக்குத் தவறான அர்த்தம் கற்பித்து விமர்சிப்பது நியாயமற்றதொன்றாகும். தமது யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தின்போது ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறைப் பகுதிக்கும் சென்று பாதிக்கப்பட்ட பொதுமக்களையும் சந்தித்துள்ளார். ஐ.தே.கட்சியின் தலைவர் என்ற ரீதியில் அல்லாது, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து அவர்களது பாதிப்புக்களையும் சிரமங்களையும் கண்டறிய தென்பகுதியிலிருந்து வந்த ஓர் அரசியல்வாதி என்ற ரீதியிலேயே அப்பொதுமக்கள் ரணிலைக் கருதி வரவேற்றனர்.

இதேவகையில், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமது இழப்புக்களையும் சிரமங்களையும் பார்வையிட தென்பகுதியிலிருந்து வரும் ஏனைய அரசியல்வாதிகளையும் அவர்கள் வரவேற்றுத் தமது துயரங்கள், இழப்புக்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்க வேண்டுமாயின் அது அரசியல்வாதிகளது அரசியல் செயற்பாடுகளின் அடிப்படையிலேயே அமைய முடியும். ☆

*தமிழில்:*

**வீயெஸ்ரீ**

## சமூக அபிவிருத்தி மன்றம்
### இடம்மாற்ற அறிவித்தல்

எமது சமூக அபிவிருத்தி மன்றமானது இன்று (19.01. 2005) புதன்கிழமை முதல் இல.109, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்பபாணம் என்னும் விலாசத்திலுள்ள கட்டடத்திற்கு இடம்மாற றப்பட்டு செயற்படவுள்ளது என்பதை அரச, அரசசார்பற்ற, சர்வதேச நிறுவனங்கள், எமது மன்ற அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தலைவர் - நிர்வாகம் (12-11-15-26)

(40951) சமூக அபிவிருத்தி மன்றம், யாழ்ப்பாணம்.



உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில்

**கணனிகள்!** **CLEARANCE SALE**

Computers To suit your BUDGET

**NET** Computers Made in Expensive

Jan - 31 வரை

ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற மீளமைக்கப்பட்ட

IBM, Compaq கணனிகள்

* PII - 300 MHz - IBM/64MB/2.5GB
* PII - 333 MHz - IBM/64MB/3.2GB
* PII - 333 MHz -Compaq/64MB/3.2GB
* PII - 350 MHz -Compaq/64MB/3.2GB
* PIII - 450 MHz -Compaq/64MB/6GB

with 15" Monitor, Keyboard, Mouse, Pad and 32XCD Rom. Sound Card, Multi Media Speakers

**Computer Accessories at attractive Prices**

- உத்தரவாதத்துடனும் குறைந்த விலையுடனும் பெற்றுக் கொள்வதுடன் விற்பனைக்குப் பிந்திய சேவையினையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கணனிகள், கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனையும், அதற்குரிய உதிரிப்பாகங்கள் சகல விதமான திருத்த வேலைகள் என்பவற்றுக்கு,
- CD Players
  Panasonic DVD STEREO SYSTEM (5 DVD Changer)
- Connecting Phone
  P C O Conference Unit குறைந்த விலைகளில்

**NORTH EAST TECHNOLOGIES [PVT] LTD**
No: 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
T.P.: 021 - 222 3786 web site: www.net.slt.lk.

(சி-40501)(26-11-15)


## சுதேசிய திருநாள் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.19

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் மாவட்ட ரீதியான போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், தாச்சி, வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுப் போட்டிகளுக்கும் -

குழு விவாதப்போட்டி, வரலாற்று நாடகப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்ற கலைப் போட்டிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கழகத் தலைவருக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (3-202)

## எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.19

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன விழிப்புக் குழுவினரால் கோண்டாவில் நிரு கல்வி நிலையத்தில் 'எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு' நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன விழிப்புக் குழுவினரான பி.வாசுதேவன், கே.உதயா ஆகியோர் இக்கருத்தரங்கினை நடத்தினர்.

இக்கருத்தரங்கில் உயர்தர வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்டனர். (3-12)


### மில் வேலை ஆள் தேவை

அனுபவமுள்ள மில் வேலைதெரிந்தவர் உடன்தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

சாந்தி கிறைன்டிங் மில்
50. பலாலி றோட். (எரிபொருள் நிலையம் முன்பாக) திருநெல்வேலி. (40977)



உடுவில் இந்து இளைஞர் மன்றம்
### பாலர்கல்வி ஆசிரியர் ஆள்சேர்ப்பு

1. பாலர் கல்வி ஆசிரியர்
2. பகுதிநேர ஆங்கில ஆசிரியர் (பாலர் கல்வி)

மேற்படி பதவிகளுக்காக தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரி முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிபெற்றிருப்பது விரும்பத்தக்கது.

**விண்ணப்ப முடிவு திகதி: 31.01.05**

விண்ணப்ப முகவரி: ப.சசிவர்ணன் செயலாளர்
உடுவில் இந்து இளைஞர் மன்றம்
'க்ணேச வாசம்', அம்பலவாணர் வீதி.
உடுவில், சுன்னாகம். (C/40500)


# ரணில் இன்று அம்பாறை விஜயம்

காரைதீவு,ஜன.19

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்கிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கு அவர் நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளார்.

தேசிய பட்டியல் எம்.பி.மையோண் முஸ்தபாவும் கரையோரப் பிரதேச விஜயத்தின்போது கலந்துகொள்வார்.

கடந்தவாரம் ஐ.தே.கட்சியின் மற்றுமொரு முக்கியஸ்தர் கருஜயசூரியா மற்றும் எம்.எச்.மொகமட், ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் கரையோரப் பிரதேசத்திற்கு மையோண்முஸ்தபா எம்.பியுடன் விஜயம் செய்திருந்தனர். கருஜயசூரியா திருக்கோவில் பகுதிக்குச் சென்று முன்னாள் எம்பி அரிய நாயகம் சந்திரநேருவோடு இணைந்து அப்பகுதியைப் பார்வையிட்டார். (ஐ)

# பதிவாளர் எழுத்துப் பரீட்சையில் மாவட்டத்தில் ஐந்து பேர் சித்தி

நவாலி,ஜன.19

மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் நிலவும் பதிவாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைகளில் யாழ்.மாவட்டத்தில் 5பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.செயலக கணக்குக்கிளையைச் சேர்ந்த ஆ.சத்தியமூர்த்தி, க.நடராசா, உணவுக்கட்டுப்பாட்டுக் கிளையைச் சேர்ந்த ப.பிரபாகர், யாழ். பதிவாளர் அலுவலகத்தைச் சேர்ந்த க.ஆனந்தி, பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சரஸ்வதி ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் கொழும்பு பதிவாளர் அலுவலக தலைமை அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு அம்பாறையில் கதவடைப்பு

காரைதீவு,ஜன.19

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச நலன்புரி முகாம்களில் துயர்துடைப்புப் பணியில் ஈடுபட்டு வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு கதவடைப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

நலன்புரி முகாம்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகமோ, பதாகைகளோ இருக்கக் கூடாதென விஷேட அதிரடிப்படையினர் அழுத்தம் கொடுத்ததன் பேரில் அவை அகற்றப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் நலன்புரி முகாம்களுக்குச் சென்று அவை அகற்றப்படவேண்டியதன் அவசியம் குறித்து உரியவர்கட்கு கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசில் பதிவுசெய்யப்பட்டதோர் அரச சார்பற்ற நிறுவனமே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என அண்மையில் விஜயம் செய்த யாழ். மாவட்ட எம்.பி.சிவாஜிலிங்கம் அரச அதிபரிடம் கூறியபோது, அவர்கள் எவ்வித பிரச்சினையுமில்லாமல் பணியாற்றலாம் என அம்பாறை மாவட்ட படை இணைப்பதிகாரி கேணல் டயஸ் முன்னிலையில் கூறப்பட்டிருந்தது.

மேலும், விஷேட அதிரடிப்படை மாவட்ட இணைப்பதிகாரி உபுல் செனிவிரத்னவுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழக அம்பாறை மாவட்ட பணிப்பாளர் பி.ஆதவன், அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலிலும் சுமுகமாக நடக்க ஆவன செய்வதாகக் கூறப்பட்டது. எனினும், கடந்த ஒரு சில தினங்களாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழக பதாகைகளையோ, பணிமனைகளையோ அகதி முகாம்களுக்குள் காணமுடியவில்லை.

ஆனால், பகற்பொழுதில் அவர்கள் முகாம்களில் துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக அவசர சேவை செய்வதில் என்ன தவறிருக்கிறதென ஓர் அரசியல்வாதி கேள்வி எழுப்பியுள்ளார்? மக்கள் போர்க்கொடி தூக்கத் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையிலான 25 மகளிர் அணி போராளிகள் வன்னியிலிருந்து வந்து அம்பாறை மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்களுடன் கூடுதலாகப் பழகி உளச் சீராக்கத்திலீடுபடுவதோடு உதவியும் புரிந்து வருகிறார்கள். குழந்தைகள் மத்தியில் கலைநிகழ்சிகளையும் நடத்தி வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சேவையாற்றி பெருமதிப்பைப் பெற்று வருகின்றனர்.

## சமூக அபிவிருத்தி மன்றக் கூட்டம்

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத்தினரின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள சமூக அபிவிருத்தி மன்ற காரியாலயத்தில் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்துக்கு மன்றத்தின் சகல அங்கத்தவர்களையும் அனுப்பிவைக்குமாறு அதன் கிளைகளுக்குச் செயலாளர் திருமதி ஜெபமணி யோசேப் கேட்டுள்ளார். (3-152)


உ

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 9ஆம் நாள் (22-01-2005) சனிக்கிழமை பகல் 12.12 மணி முதல் 01.12 வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெயந்தன்**
(உரிமையாளர், சங்கு சக்கரம், 111, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**சந்திரநிபா**
(வருமான பரிசோதகர், வத்தளை நகரசபை)
அவர்களுக்கும்

எம்பெருமான் ஸ்ரீமத் நாராயணன் கிருபையால் நல்லை சிவன் தேவஸ்தான மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசார வைபவத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி சி.தியாகராஜா,
(சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ், உரிமையாளர்)
33/3, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 4591606.

திரு.திருமதி குணரத்தினம்,
54/9, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

☞ இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (40946)(26-11-15)



**அறிமுகம்!!!**
DISH TV மற்றும் KUBAND DTH

DISH TV
STAR Sports, Espn
SUN TV, JEYA TV,
பொதிகை உட்பட 100இிற்கு மேற்பட்ட சனல்கள -KU band
Dish & LNBF Decorder
அனைத்தும Rs.17,500/= மட்டுமே.

KU BAND DTH SUN TV,
பொதிகை உட்பட 35இற்கும் மேற்பட்ட சனல்கள் KU band
Dish & LNBF Digital Receiver அனைத்தும்
Rs 13,000/= முதல்

8அடி CBAND Digital சிஸ்டம்
Rs.22,500/= மட்டும்.

10அடி CBAND System
Rs.28,500/= மட்டுமே.

மற்றும் K TV Decorder, Smart Card, கேபிள் TV இற்குரிய அனைத்து உபகரணங்களும் மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

## செய்மதி தொலைக்காட்சி!

செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் TV துறைகளில் இலங்கை முழுவதும் மிக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி வரும் Sats - Tech நிறுவனம் தனது சேவையை இலங்கை முழுவதும் NORTH LANKA TELEVISION NET WORK (NLT NET WORK) என்னும் பெயரில் விஸ்தரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இலங்கையில் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் (Fiber Optical Technology) கேபிள் TV இயக்குநர்களின் இன்னல்களுக்குத் தீர்வை வழங்கிவருகின்றோம்.
யாழ். மாவட்டத்தில் எமது Fiber Optical MSOவில் இணைந்து பயன்பெற உடன் தொடர்புகொள்ளவும்.

**SATS - TECH ENGINEER'S**
M/S நஷனல் வீடியோ சென்ரர் இல. 182, கே.கே.எஸ்.வீதி, (குளப்பிட்டி சேர்ச் அருகில்) கொக்குவில், யாழ்ப்பாணம்.

(C/40477)(12) Phone: (021) 222 5908 / 077 6618580 / 0777 251957 ISLAND wide Hot Line: 0777 710785

### சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# நிவாரணப் பணிகள் அனைத்தையும் மத்தியிலேயே குவிக்கின்றது அரசு!

## கனேடியப் பிரதமருக்கு விளக்கினர் தமிழ்க் கூட்டமைப்பினர்

கொழும்பு,ஜன.19

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் அனைத்தையும் இலங்கை அரசு மத்தியிலேயே குவித்து வைத்துள்ளது. புனர்நிர்மாணம், மீள்கட்டுமானம், அபிவிருத்தி நடவடிக்கைகள் தெற்கிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

மத்தியில் குவிக்கப்பட்ட அதிகாரத்தை தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனாலேயே கடந்த 50 வருடங்களாக தமிழ்த் தலைமைகள் சமஷ்டி ஒழுங்கு ஒன்றைக் கோரி வருகின்றன.

- இவ்வாறு கனேடியப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்திருந்த கனேடியப் பிரதமர் போல் மாட்டினை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்துப் பேசினர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு தமிழர் தரப்பு நியாயங்களை கனேடியப் பிரதமருக்கு விளக்கினர்.

முன்னதாக கனேடியப் பிரதமர் கல்முனைக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பின்னர் கொழும்பு திரும்பிய அவர் தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசினார். தொடர்ந்து பிற்பகல் 3.00 மணியளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அவருடனான சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு பக்க அறிக்கை ஒன்றை ஆங்கிலத்தில் விடுத்திருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருந்த முக்கிய விடயங்கள் வருமாறு:

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான சூழ்நிலை எவ்வாறு சமாதான முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு உதவும் என்று கனேடியப் பிரதமர் தமிழ்க் கூட்டமைப்பினரிடம் வினவினார்.

அதற்குப் பதிலளித்த கூட்டமைப்பினர், அனர்த்தத்தின் பின்னரான நிலைமையில் புலிகள் செயற்றிறன் மிக்க ஈடுபாட்டை முழு வீச்சில் காட்டினர். இதன்மூலம் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்பியிருக்க முடியும். அத்துடன், ஏற்றுக்கொள்ளக் கூடிய பேச்சு மூலம் அரசியல் தீர்வை எட்டுவதற்கு வாய்ப்பான ஒரு சூழலைத் தோற்றுவிப்பதில் கவனம் செலுத்தியிருக்க முடியும் - என்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

எனினும், அரசு அப்படிச் செய்யவில்லை. நிவாரணப் பணிகளை அரசு மத்தியில் குவித்து வருகின்றது. புனர்நிர்மாணம், மீள்குடியமர்தல், மீள்கட்டுமானம், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன கொழும்பை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

மத்தியில் குவிக்கும் இந்த நடவடிக்கை தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணானது. கடந்த நான்கு தசாப்தங்களாக வடக்கு - கிழக்கு மக்கள் இத்தகைய நடவடிக்கையை அறவே விரும்பவில்லை.

கனடாவில் கியுபக்கில் இயற்கை அனர்த்தத்திற்குப் பின்னதான நிலைமை தொடர்பில் ஒட்டாவாவே சகல முடிவுகளையும் எடுத்ததை ஒத்திருக்கிறது. இலங்கை அரசின் நடவடிக்கை. இத்தகைய மத்தியில் குவிக்கும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அரசு நிவாரணப் பணிகளில் நேர்மையாக நடந்துகொள்வதாக இல்லை. வடக்கு-கிழக்கு மக்களைக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமலேயே அரசு தொடர்ந்தும் நடந்து வருகின்றது.

நூற்றுக்கு நூறுவீதம் சிங்களவர்களைக் கொண்டுள்ள இராணுவத்தினரை வடக்கு - கிழக்கில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்களில் அரசு குவித்துள்ளது. இந்த நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்கள் இயற்கை அனர்த்தத்தால் தமது வீடு வாசல்களை முற்றாக இழந்தவர்கள்.

வடக்கு - கிழக்குப் பிராந்திய நிலைமைக்கு ஏற்ப அரசு வித்தியாசமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அங்கு அரசு செய்ய வேண்டிய நிவாரணம் தொடர்பான பணிகள் நிறையவே உண்டு. ஆனால், அவற்றை அரசு செய்வதாக இல்லை.

அதனால்தான் வடக்கு - கிழக்கில் நிவாரண நடைமுறைகளைக் கையாள்வதற்கு என்று ஒரு பொறிமுறை தேவை என்றும் நாம் வேண்டுகின்றோம். சர்வதேச தன்னார்வத் தொண்டர்குழுக்கள் ஊடாக நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அல்லது அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கு சர்வதேசத்தின் உதவிகள் சென்றடையவேண்டும். அப்படிச் செய்தால்தான் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களும் சமவளவிலான நிவாரணப்பங்கைப் பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

ஆகையால்தான் கனடா போன்ற அரசின் உதவிகூட சர்வதேசத் தன்னார்வத் தொண்டர் குழுக்கள் ஊடாகவே வழங்கப்படவேண்டும் என்று கேட்கின்றோம் - என்றும் தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதவிர, மேலும் பல விடங்கள் பற்றியும் தமிழ்க் கூட்டமைப்பினர் கனேடியப் பிரதமருக்கு விளக்கினர்.

அத்தோடு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினர். நிவாரண விநியோகத்தைக் கையாள்வதில் நல்லிணக்கம்,, ஐக்கியம் என்பவற்றுக்குக் குந்தகமான கருத்துக்களைத் தெரிவிப்பது மற்றும் அறிக்கைகள் வெளியிடுவது பற்றியும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நல்லிணக்கம் பற்றியும் -

விடுதலைப் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் மனிதநேயப் பணிகளில் இணைந்து செயற்பட்டு வருவது பற்றியும் -

ஐ.நா.பொதுச் செயலர் இலங்கை வந்திருந்தபோது சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற வடபகுதிக்குச் சென்று பார்வையிடுவதற்கு அரசு அனுமதி மறுத்தமை பற்றியும்-

கனேடியப் பிரதமர் போல் மாட்டின் கூட பாதிக்கப்பட்ட வடக்குக்கு வராமல் போனமை பற்றியும்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கனேடியப் பிரதமருக்கு விரிவாக விளக்கினர் என்றும் அந்த நான்கு பக்க ஆங்கில அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

## அரசுக்குள்ளும் குழப்பத்தை உண்டாக்கிய சுனாமி!

கொழும்பு,ஜன.19

ஜே.வி.பியினரின் சுனாமி அனர்த்தப் பணி அரசுக்குள் பெரும் குழப்பத்தையும், விரிசல்களையும் ஏற்படுத்தியுள்ளது என்று தெரிகின்றது.

சுனாமி அனர்த்தப் பணிகள் என்ற பெயரில் ஜே.வி.பியினர் அரசியல் பிரசார நடவடிக்கைகளை விஸ்தரிக்கின்றனர் என சுதந்திரக் கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஜே.வி.பியின் நடவடிக்கைகளுக்கு தேசிய ஊடகங்களில் இடமளிக்கவேண்டாம் என கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்தச் செயல் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியினருக்கு பெரும் எரிச்சலை மூட்டியுள்ளது. ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். நாடாளுமன்றத்தில் ஆதரவைப் பெருக்க வேண்டும். எதிர்க்கட்சியினரோடு மோதவேண்டும் என்கின்றபோது ஜே.வி.பியினரின் ஆதரவும், செல்வாக்கும் இந்த அரசிற்குத் தேவைப்பட்டன.

இப்பொழுது ஏறிய ஏணியை உதைத்துத் தள்ளுவதுபோல் எம்மை அரசு ஓரங்கட்டப் பார்க்கிறது என்று ஜே.வி.பியினர் அரசிற்கு எதிராகக் குற்றம் சுமத்துகின்றனர்.

"நாடே சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம். ஆனால், அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல அரச நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைக்க முயற்சிக்கின்றது. இதனை நாம் அனுமதிக்கப் போவதில்லை. அரசு இப்படி எங்களை ஓரங்கட்ட முனைந்தால், மீண்டும் எமது கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப்போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டியநிலை ஏற்படும். அதைத் தவிர்க்க முடியாது" என்று கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சரான லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஆனால், இவர்களுடைய பயமுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் நாம் அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை. ஜே.வி.பி. அமைச்சுகள் தொடர்பான விடயங்களைத் தவிர கட்சி விவகாரங்களை அரச ஊடகங்களில் ஒலி,ஒளி பரப்பக்கூடாது என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சரின் உத்தரவை ஜே.வி.பி.தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும் வன்மையாகக் கண்டித்துள்ளார். அரசின் நடவடிக்கைகளுக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.ஆதரவு வழங்க முன்வந்திருப்பதே அரசின் திடீர் மாற்றத்திற்கான காரணம் என ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார, இன்னும் ஒருவருட காலத்திற்குள் எந்தத் தேர்தல்களும் நடைபெறாது என்று அறிவித்துள்ளார். இப்படியான நிலையிலேயே ஆளும் பங்காளிக்கட்சிகளான ஜே.வி.பிக்கும், ஸ்ரீல.சு.கட்சிக்கும் இடையிலான முறுகல்நிலை அதிகரித்துள்ளது.

(க-8)

## கல்லுண்டாய் மயானப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

கல்லுண்டாய் இந்து மயானப் பகுதியைச் சுற்றிக் கழிவுகள் கொட்டப்படுவதனால் அங்கு தகனக்கிரியைகள் செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுவதாக மயானப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனை உடன் தடைசெய்யுமாறுகோரி நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வலி.தென்மேற்கு பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த இந்து மயானம் அமைந்துள்ள இடம், காலம் காலமாக ஓர் புனித பூமியாகப் பேணப்பட்டு வந்ததென்றும் தற்போது இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்கள், கோழிகள் என்பவற்றின் கழிவுகளையும் மலகூடங்களிலிருந்து எடுத்துவரப்படும் மலமும் இங்கு கொட்டப்படுவதை மக்கள் நேரில் அவதானித்துள்ளனர். எனவே இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மகஜரில் கேட்டுள்ளது.

(ஜ-100)

## புலிகள் பகுதிக்கும் இராணுவத்தை அனுப்புங்கள் என்கிறார் சோமவன்ஸ

கொழும்பு,ஜன19

சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி. தமிழ்ப் பிரதேசங்களை கைப்பற்ற ஆலோசனை கூறியிருக்கின்றார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. இலங்கை இராணுவத்தைப் புலிகள் பகுதிக்கும் அனுப்பி நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜே.வி.பி. தலைவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சுனாமி நாட்டின் எல்லாப் பாகங்களையுமே தாக்கியுள்ளது. எல்லா இன மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், எந்த ஓர் இனத்தவர்களுக்கும் என விசேட சலுகைகளோ, அல்லது பிரத்தியேகத் திட்டங்களோ வகுக்கப்படக்கூடாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த சமாதான உடன்படிக்கையை கையில் வைத்துக்கொண்டு எமக்குப் பூச்சாண்டி காட்டுகின்றனர். சர்வதேச இராணுவமோ, இலங்கை இராணுவமோ தமது பிரதேசங்களுக்கு வரக்கூடாது எனத் தடைபோடுகின்றனர்.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தை தமிழ்ப் பிரதேசங்களுக்கும் அனுப்ப வேண்டும். அதன்மூலம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களையும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வரமுடியும் எனவும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆலோசனை கூறியுள்ளார்.

(க-3)






கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் சுழிபுரம் பிரதேசத்தில் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படாதபோதும் அப்பிரதேச மீனவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான தமது தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர். சுழிபுரம், சவுக்கடிக் கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களில் பெரும்பாலானோர் தமது மீன்பிடிப் படகுகள், வலைகள் என்பவற்றை இழந்துள்ளதுடன், மீன்வாடிகளும் சேதமடைந்துள்ளன. இதனால், மீனவர்கள் தமது தொழிலை மீண்டும் மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த படகையும் வலைகளையும் முதற்படத்திலும் முடகம்பியில் சிக்குண்ட மீன்பிடி வலைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களை இரண்டாவது படத்திலும் கட்டட இடிபாடுகளுக்கிடையே கட்டோடு காணப்படும் வலைகளை மூன்றாவது படத்திலும் தூக்கி வீசப்பட்ட படகுகள் சவுக்கு மரங்களில் மோதி அவற்றின் பட்டைகள் உடைந்திருப்பதை நான்காவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்:சங்கானைச் செய்தியாளர்)*

## சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்



இப்பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமைபுரியும்

### திரு.சண்முகம் வீரசிங்கம்


அவர்கள் 17-01-2005 ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி பா.சுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல பதவிகள் பெற்று சிறப்புடன் வாழவேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

தென்மராட்சி,
சாவகச்சேரி.
(சி-40505)(26-11-45)

தென்மராட்சிப் பிரதேச செயலக நலன்புரிக் கழகத்தினர்.

## பிறந்தநாள் நினைவும் அஞ்சலியும்





டாக்டர்
**விசுவநாதர் சின்னையா**
(நிலப்பிரபு - குழுவான், மலேசியா)

திருமதி
**வள்ளியம்மை சின்னையா**

| | | |
|---|---|---|
| 19.01.1896 | பிறப்பு | 01.09.1910 |
| 13.12.1975 | இறப்பு | 30.01.1942 |

இன்றைய பிறந்தநாளில்
நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.

L.இராஜநாயகம்,
பாணாவெட்டி,
தொல்புரம்.
(40992) (24-11-45-26)
- இலட்சாதிபதியின் ஏழை மகள்.

## ஆசிரிய சமூகத்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகமே.

இந்த ஆண்டு முதல் கொடுக்கப்படவுள்ள மேலதிகபடி சரியான வரையறைக்குட்பட்ட வகையில் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக் குறியே. அல்லது கஷ்டப் பிரதேச, எல்லைப் பிரதேச வரையறை பேணப்படுகிறதா என்பது பிரச்சினைக்குரியனவே. கஷ்டப் பிரதேச எல்லை வரையான தெளிவான முறையில் வகுக்கப்படல் உடனடித் தேவையாக உள்ளது. இதற்கு இன்னொரு மிக முககிய காரணம் கஷ்டப்பிரதேச ஆசிரிய நியமனம் வழங்குவதைக் கருதத்திற் கொள்ளுதலும் ஆகும். ஓர் ஆசிரியர் மாகாண அமைச்சினால் கஷ்டப் பிரதேச முதல் நியமனம் என நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டு, நியமனம் வழங்கிவிட்டு பின்னர் அப்பிரதேசத்தையும் அப்பாடசாலை யையும் கஷ்டப்பிரதேச வரையறைக்கு உட்படுத்தாமல் இருப்பது கல்வி அதிகாரிகளே பொறுப்பானவர்களும் வகைகூற வேண்டியவரும் ஆவார்.

கஷ்டப்பிரதேச வரையறை தெளிவின்மை ஆசிரிய நியமனத்திலும், ஆசிரியர்களுக்கான மேலதிக கொடுப்பனவிலும் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால், ஒரே ஆசிரியரே குறிப்பிட்ட கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற மிக வேதனையான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவற்றினை நிவர்த்தி செய்யும் வகையில் கஷ்டப்பிரதேச எல்லை வரையறையை அமுல்படுத்துவது கல்வி நிர்வாக அதிகாரிகளினது உடனடிப் பொறுப்பாகும். ☆

## வேலையாள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ளவர் தேவை.
நேரில் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:
**புதிய துர்க்கா பேக்கரி**
கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(40994)

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 6ஆம் நாள் இன்று (19-01-2005) புதன்கிழமை காலை 9.00 - 11.00 மணிவரை வரும் சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

### வேணி நகை மாடம்
### Veney Jewellery

என்னும் ஸ்தாபனத்தை **இல.40, கன்னாதிட்டி வீதி (மக்கள் வங்கிக் கிளை முன்பாக) யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் திறந்து, நடத்த இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஸ்தாபனத்தை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

No. 40, Kannathiddy Road,
(Opposite People's Bank ), Jaffna.
T.P.: 077 6307097, 0777 062045

**Mr.K.Vasikumar**
Uduvil South,
Chunnakam.
(40999)(26-11-45)

## கண்ணீர்ப் பூக்கள்

இல.20 பழம்றோட், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட



### திருமதி ஜெயவதனி மனோகரன் (சுதா)

அவர்கள் 14-01-2005 வெள்ளிக்கிழமை தைப்பொங்கலன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-01-2005) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இவர் சுப்பிரமணியம் - தங்கம்மாவின் மருமகளும் மகேந்திரராஜா ஜெயகௌரியின் மைத்துனியும் கஜானன், அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாருமாகிய சுதா இறந்த செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்ததியது. அன்னாருக்கு இக்கரையில் நின்று கண்ணீர்ப் பூக்களைக் காணக்கையாக்குகின்றோம். ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

தொட்டிலடி,
சங்கானை.
(40997)(26-11-45)
தகவல்: **சு.மகேந்திரராஜா** (மைத்துனர்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
30 – 04 – 1934

உதிர்வு
20 – 12 – 2004

எமையெல்லாம் அன்பாக
வழிநடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து மாதமும்
ஒன்றானதோ? உங்கள் பூமுகம்
ஆண்டுகள் கோடியானாலும்
எம் நினைவுகளில் நிற்கும்.

எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் சொக்கலிங்கம் துரைஐயா அவர்கள் 20.12.2004 இல் எம்மை விட்டுப்பிரிந்த செய்தியறிந்து உடன் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அன்பர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்துகொண்டு மலர்மாலைகள், மலர்வளையங்கள் சாத்தி, அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்திய அன்பர்கள் அனைவருக்கும், இன்றைய ஆத்ம ஈடேற்றக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்ட அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கரம் குவித்து உள்ளன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

### அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

(ஸ்தாபகர், கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்ஸி பலஸ், கண்ணன் கடை)

(41051)(42-11-15-26)

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# மீள்குடியமர்வுப் பணிகளில் தமிழீழ நிர்வாக சேவையினர்

புதுக்குடியிருப்பு,ஜன.19

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தத்தில் சிக்கி இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு தமிழீழ நிர்வாக சேவையினர் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

தற்போது மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு, பாலையடி, சிலாவத்தை, அலம்பில், செம்மலை ஆகிய கிராம மக்கள் தமது பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இவர்கள் அன்றாடக் கடமைகளில் ஈடுபடும் பொருட்டு கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டு, சூழலில் தொற்றுநீக்கி மருந்துகள் விசிறப்பட்டு துப்புரவுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் மீளக்குடியமர ஏற்ற ஒழுங்குகளை தமிழீழ நிர்வாக சேவையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைவிட ஆங்காங்கே தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுக் குடிதண்ணீர் விநியோகமும் இடம்பெறுகிறது.

மலசலகூடங்கள் அமைக்கப்பட்டும் பழையன பாவனைக்கேற்ற வகையில் சீர்படுத்தப்பட்டும் வருகிறது.

நலன்புரி நிலையங்களிலிருந்து வீடு திரும்பும் மக்களுக்கு வாகன வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களது பாவனைக்கு, இருவாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கிவருகிறது.

வீடு வாசல்களை முற்றாக இழந்த மக்கள் தற்பொழுது தங்குவதற்கு ஏற்றவாறு தற்காலிகக் குடியிருப்புக்களும் நிர்வாக சேவையினரால் அமைக்கப்படுகின்றன. (த-353-204)

## வேரவில், கிராஞ்சி பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

வேரவில்,ஜன.19

மழைவெள்ளம் காரணமாகத் தடைப்பட்டிருந்த வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு பஸ்சேவை மீண்டும் நடைபெறுகின்றது.

பூநகரி, வேரவில் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன், பொன்னாவெளிக் கிராம சேவை அலுவலர் த.மகாபரன் ஆகியோரின் அனுசரணையுடன் வேரவில், பொன்னாவெளி , கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராம மக்கள் ஒன்றிணைந்து வெள்ளத்தினால் சீரற்றிருந்த வீதியைச் செப்பனிட்டனர். இதனையடுத்து மீண்டும் இப்பகுதிகளுக்கான பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது. (த-323-202)

## வன்னியின் கல்வி அபிவிருத்தி குறித்து கிளிநொச்சியில் கலந்துரையாடல்

மல்லாவி,ஜன.19

வன்னிப் பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன் கிழமை காலை 9மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-203-322)




முல்லை மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பின்போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், தமிழழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், விவசாய உதவிப் பணிப்பாளர் கோகுலதாசன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம் : ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## முல்லைத்தீவில் நியமனம் பெற்றவர்கள் கடமையைப் பொறுப்பேற்கப் பின்னடிப்பு

புதுக்குடியிருப்பு,ஜன.19

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக யாழ். மாவட்டப் பட்டதாரிகள் பலர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் அவர்கள் சிலர் அங்கு சென்று தமது கடமைகளை ஏற்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட 112பேரில் 80 பட்டதாரிகள் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். சுனாமி அனர்த்தத்தினால் முல்லை மாவட்டத்தில் பெருமளவான அழிவுகள் ஏற்பட்டதனாலேயே இவ்வாறு அங்கு சென்று கடமையைப் பொறுப்பேற்பதற்குச் சிலர் பின்னடிக்கின்றனர் என்று கூறப்பட்டது. நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்களும் தமக்குக் கரையோரப் பாடசாலைகளில் நியமனம் வேண்டாம் என்றும் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பிரதேசங்களில் நியமனம் வழங்குமாறும் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

(த-353-203)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி பட்டதாரிகள் புறக்கணிப்பு

வட்டக்கச்சி,ஜன.19

பட்டதாரிகள் நியமனத்தின்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு உட்பட்ட பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன்.

கடந்த 11ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிப் பயிலுநர்களை பயிற்சிக்கு அழைக்கும்போது கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள பட்டதாரிகளை முதலாவது பட்டியிலில் சேர்த்துக் கொள்ளாது விட்டமை திட்டமிட்ட புறக்கணிப்பே ஆகும்.

அத்துடன் தற்போது வழங்கப்பட்டுள்ள நியமனத்தில் கூட இவர்களுக்கு மத்திய அரசின் திணைக்களங்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இதுவும் அதன் தொடர் முயற்சியே - என்றார்.

கிளிநொச்சி மாவட்டப் பட்டதாரிப் பயிலுநர்கள் தமக்கு மத்திய அரசின் திணைக்களங்களுக்கு நியமனம் வழங்கப்படாமையை ஆட்சேபித்து முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிளிநொச்சி அரச அதிபர் ஊடாக மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

இதன் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

இதுதொடர்பாகத் தாம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எடுத்துக்கூறுவதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்வின்போது தெரிவித்தனர்.

(த-2ᐤ3-405)




## மல்லாவி அக்கராயன் ஊடாக முகமாலைக்கு மீண்டும் பஸ்சேவை

மல்லாவி,ஜன.19

மல்லாவியிலிருந்து அக்கராயன் ஊடாக முகமாலைக்கு மீண்டும் பஸ்சேவை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த சில மாதங்களாக மழை பெய்ததால் வீதிகள் சீரில்லை என்பதைக் காரணம் காட்டி இந்தப் பஸ்சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதனால், ஆலங்குளம், உயிலங்குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

எனினும், தற்போது இடைநிறுத்தப்பட்ட பஸ் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இக்கிராம மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-322-204)

## வீதி திருத்தப் பணிகள் முடிவுறாததால் சிரமம்

பூநகரி - பள்ளிக்குடா வீதியின் திருத்த வேலைகள் முடிவுறாமல் உள்ளதால் அப்பகுதியால் பயணஞ்செய்பவர்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியின் திருத்தவேலைகளுக்காக திணைக்களத்தால் கல் பறிக்கப்பட்டுள்ளபோதும் வேலைகள் நடைபெறவில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (த-291)

## தொழில்நுட்ப அலுவலர் இல்லை; கட்டடப் பணிகள் மந்தநிலையில்!

பரந்தன்,ஜன.19

- கிளிநொச்சி மாவட்ட கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் வைத்திய நிலையம் ஆகியவற்றின் கட்டட வேலைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி விசனம் தெரிவித்துள்ளார்.

அரச செயலக தொழிநுட்ப அலுவலர் இல்லாமையாலேயே இந்த வேலைகளில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எனவே அரச செயலக தொழிநுட்ப அலுவலரை அனுப்பி கட்டடவேலைகளை விரைவில் முடித்துத் தருமாறு அவர் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(த-202-352)

## பரந்தன்-பூநகரி வீதி பலத்த சேதம்

வேரவில்,ஜன.19

பரந்தன் - பூநகரி வீதியின் திருத்தவேலைகள் நடைபெறாததால் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியின் திருத்த வேலைகளுக்கென வதிகளில் குறுக்காக கிரவல் பறிக்கப்பட்டுள்ள போதிலும் திருத்த வேலைகள் நடைபெறாமையால் மேலும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது. (த-323-202)



நேற்று மந்திகை வைத்தியசாலையில் மருத்துவ நடவடிக்கையில் ஈடுபட்ட அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த வைத்தியர்களைப் படத்தில் காணலாம்.

*(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர் சுந்தரலிங்கம் மற்றும் சிவசைலஜா)*

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தைத்திங்கள் 6ஆம் நாள் இன்று (19.01.2005) புதன்கிழமை முற்பகல் 10.05 மணிமுதல் 11.05 மணிவரையில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

## ISHA TECH

என்னும் ஸ்தாபனத்தைத் திறந்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெறுகிறது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விரிவுபடுத்தப்பட்ட எமது சேவைகள்:
கணனி விற்பனை, கணனி திருத்துதல், கணனி வகுப்புகள், சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி

Type setting, Printing, Scaning, CD Sales, Writing, Graphic Design, Computer Games, Self Practicals.

அத்துடன், இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பூப்புனித விழா, பிறந்தநாள், திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

ISHA TECH கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P.: 077 3115873, 0777 113073

(41055)(24)

- E.Y. பற்றிக்
உரிமையாளர்.


# மரண அறிவித்தல்கள்

## கிட்டிணபிள்ளை தர்மலிங்கம்



உடுப்பிட்டியைச் சேர்ந்த கிட்டிணபிள்ளை தர்மலிங்கம் (மேசன்) அவர்கள் நேற்று (18.01.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் சபீனா, பிரகாஸ், பிரபு (சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி), தர்சினி, துஷ்யந்தி ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2005) புதன்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(40157)(42-11-45-29)

தகவல்:
குடும்பத்தினர்.

## நவரட்ணம் மனோகாந்தன்



மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு, மானிப்பாய் சுந்தர்சன் நிறுவனத்தில் கடமையாற்றியவருமாகிய, நவரட்ணம் மனோகாந்தன் அவர்கள் 17.01.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு நவரட்ணம் - லீலாவதி அவர்களின் அன்பு மகனும் சரோஜாவின் அன்புக் கணவரும் வினுஜா, வினோஜன் அவர்களின் அன்புத் தந்தையும் ரஞ்சனாதேவி, ரட்ணகாந்தன் (ஜேர்மனி), மோகனா (ஜேர்மனி), ரூபகாந்தன் (லண்டன்), யமுனா (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேந்திரம் (சங்கானை ப.நோ. கூ.சங்கம்), நாகேஸ்வரி (ஜேர்மனி), ராமச்சந்திரன் (ஜேர்மனி), விக்னேஸ்வரி (லண்டன்), சுரேந்திரன் (J.P.திருகோணமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியடி மார்க்கட் லேன்,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(41056)(42-11-15-29)

தகவல்:
தாய், மனைவி,
சகோதரர்கள்.

## இன்னசிமுத்து ஏபிரகாம்

(முன்னாள் ஊழியர், இ.போ.ச.)

கரவெட்டி, கரணவாய் கிழக்கைச் சேர்ந்த இன்னசிமுத்து ஏபிரகாம் 18.01.2005 அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் மாசிலாமணியின் அன்புக் கணவரும் தேவராசா (பிரான்ஸ்), தேவநேசன் (சுவிஸ்), தேவதயாளன் (லண்டன்), தேவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோர்ச் தேவநட்ணத்தின் (லண்டன்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(41060)(42-11-15-29)

தகவல்:
ஏ.மாசிலாமணி (மனைவி).

# பாராட்டி வாழ்த்துகிறோம்



மாவிட்டபுரத்தைச் சார்ந்த நாடக அண்ணாவியார்

**திரு.வே.சிதம்பரநாதன்** அவர்கள்

"கலாபூஷணம்" விருது பெறுவதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு இறை அருளால் மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

நீர்வேலி.

(41052)(12)

க.வன்னியசிங்கம் (செல்வம்) குடும்பத்தினர்.

# தவறிவிட்டது

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்
**செல்வன் தர்மராஜா பிரசன்னா**

என்பவருடைய தங்கக் கைச்சங்கிலி ஒன்று பலாலிக்கும், யாழ். தொழில்நுட்பக கல்லூரிக்கும் இடையில் 01.01.2005 அன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஒப்படைத்துதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
T.P: 077 6154067

- த.பிரசன்னா

(41000)


## S.P. கல்வி நிலையம்

அளவெட்டி பன்னாலை

SPOKEN ENGLISH

ஆசிரியர் BRITTO

அளவெட்டியில் - வியாழன், வெள்ளி 3மணி (பு.நே.)

பன்னாலையில் சனி, ஞாயிறு 11.30 (மு.நே.)

A/L 2007 கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

-நிர்வாகி.

(சீ.40508)


# பேரின்ப வாழ்வின் 6ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## சுவாம்பிள்ளை அருளானந்தம்

மண்ணக வாழ்வில் 12.10.1926
விண்ணக வாழ்வில் 19.01.1999

ஆண்டுகள் ஆறாயினும்
மாறாதையா உங்கள் நினைவுகள்!
இறைவன் சந்நிதியில் ஆன்மா
இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்

ஆக்லேன்,
உடுவில். (41053)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.


# விற்பனைக்கு

30 அடி மணவறை, சோடனைச் செற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
வைத்திலிங்க குருக்கள் சிவராஜா குருக்கள்
தல்லையபுரம் பத்திரகாளி கோயிலடி,
கரவெட்டி கிழக்கு. கரவெட்டி
Phone: 021 226 3701

(40998)


# Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6627760 முதல் 6639430 வரை
சீட்டிழுப்பு இல. 101 திகதி 17-1-2005

வெற்றி எண்கள் **7 4 8 4 2 1** சுப்பர் எண் **02**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,64,49,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,64,49,050/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 5,000/- | 5,15,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,027 | 500/- | 5,13,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,223 | 50/- | 5,11,150/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 101,346 | 10/- | 10,13,460/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 101 | 1,000/- | 1,01,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,022 | 100/- | 1,02,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,146 | 20/- | 2,02,920/- |
| மொத்தம் | 1,23,997 | | 51,56,830/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 51,56,830/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,67,33,425/-**

தொடர் இல. 7586001 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6632503-0-86
6628726-2-61
6629853-6-71
6633759-9-55
6635414-2-07
6631741-8-51
6628762-9-85
6636523-9-71

வளமான வாழ்வுக்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# ஆழ்ந்த அனுதாபங்கள்



இயற்கை அன்னையின் சீற்றத்தால் 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி தாக்கம் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவு சரித்திரத்தில் ஒரு இடம். இச்சீற்றத்தால் உறவுகளையும் / உடைமைகளையும் இழந்து தவிக்கும் அனைத்து இன மக்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கின்றோம்.



சுனாமியால் பாதிக்கபட்டவர்கள் இழந்தவற்றை மீட்பதற்கும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் அவர்களின் எதிர்காலத்தை திடமாக்குவதற்கும் கடவுள் அருள் பொழிய வேண்டுகிறோம்.

இத் துயரில் ஒன்றிணைந்த
நாம் அவ்வழியே ஒன்றிணைந்து நம் நாட்டினை
கட்டி எழுப்புவோம்.

உரிமையாளருடன் ஊழியர்கள் அனைவரும்

CHS கொலனியல் ஹாட் வெயார் ஸ்டோர்ஸ்

427, பழைய சோனகத் தெரு. கொழும்பு-12.
தொ.பேசி: 2431950, 243514, 2347981-8389

## ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலய திருவிழா



இன்று (19.01.2005) மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. திருவிழா சனிக்கிழமை (22.01.2005) காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

புதன் - கொடியேற்றம் மாலை 5.00
வியாழன் - திருப்பலி மாலை 5.00
வெள்ளி - திருப்பலி - நற்கருணை ஆசீர்வாதம் மாலை 5.00
சனி - திருவிழாத்திருப்பலி காலை 7.30

அனைவரையும் புனித செபஸ்தியாரின் பரிந்துரையையும், இறை ஆசீரையும் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

நாவாந்துறை. பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.
(40172)(43-14-16)

## ஒப்பந்தகாரர் கலந்துரையாடல்

நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என வடக்கு- கிழக்கு நிர்மாணிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைச் செயலகம் அறிவித்துள்ளது. (எ-7)

## பிரதேச செயலகங்களில் வருமான அறவீட்டு உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சி

பிரதேச செயலகங்களில் மோட்டார் வாகன வருமான அறவீட்டுப் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான கணனிப் பயிற்சி இன்று புதன்கிழமை யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதனால் இன்று மோட்டார் வாகனங்களுக்கான வரி அறவிடும் பணிகள் நடைபெறமாட்டாது என தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (த-117-204)

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01. 05. 1893 இறப்பு 19. 01. 1985

### அமரர் ஜோண் பிலிப்

மனிதர் குலமாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீர்
இருபது ஆண்டுகள் கடந்தாலும் இதயத்தில்
உருவம் மறையாது நிலைத்தே இருக்கும்

854, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (41065)(43-14-16) மக்கள்,, மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


A/L GENERAL ENGLISH
PAPER CLASS வியா, வெள். 5.p.m.
By:T.THANENDRAN
S.L.T.s.2.II, B.Com(Hons) M.M.Spi,H.N. Dip in Acc. P.G.Dip. in Edu.
COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ். (41071)


## முதலாவது ஆண்டு நினைவில் சிரார்த்த நிகழ்வு



தோற்றம் 1940 - 04 - 17 மறைவு 2004 - 01 - 31

### மயில்வாகனம் தியாகராசா

திதி:பூர்வபக்ஷ நவமி 19.01.2005

ஓடியது வருடம் ஒன்று
தேடியும் வாராய் இங்கு
ஆடிப்போய் ஆலாய்ப் பறக்கும் எம்மை
நாடி வந்து ஆதரவு தாராயோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டில் குளம், கரவெட்டி. (40520)(43-14-16) - குடும்பத்தினர்.

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று நடைபெறவிருந்த திரு. சண். வாமதேவன் (யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர்) அவர்களின் பொன் விழா நாட்டின் நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விழாத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வாமன்
பொன் விழாச் சபை கொக்குவில்.
(41074)


NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்
2007 A/L (BIO)
19.01.2005 பி.ப. 4.00
PHYSICS
திரு.குமரன் ஆசிரியரின் வகுப்பு நடைபெறமாட்டாது.
21.01.2005 பி.ப. 3.30 CHEMISTRY
திரு.சிவத்திரன் ஆசிரியரின் வகுப்பு நடைபெறும். -நிர்வாகி.
(41064)


## ஒத்துமாறல்

விசுவமடுவில் ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவர் நிர்வாகத்துறையிலோ அல்லது ஆசிரியராகவோ யாழ். மாவட்டத்தில் நியமனம் கிடைத்துள்ள ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: ப.பஞ்சலிங்கம்
சென். செபஸ்தியார்வீதி,
கோண்டாவில் கிழக்கு.
T.P 222 6878
(41063)

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09 ~ 07 ~ 1942



மறைவு 30 ~ 01 ~ 1996

### குமாரசாமி இராசரத்தினம்

(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், ஹாட்லிக் கல்லூரி, சயன்ஸ் சென்ரர், மொடேோன் கல்வி நிலையம் உரிமையாளர்)

திதி:19.01.2005

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம் நெஞ்சை விட்டு அகலாது!
உங்கள் நினைவிலிருக்கும்

ஆனந்த நிலையம், நவிண்டில், கரவெட்டி. (41059)(43-14-16) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவரூபராணி நாகரத்தினம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சிவரூபராணி நாகரத்தினம் அவர்கள் 17.01.2005 திங்கட்கிழமை அன்று சுன்னாகத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் - அபிராமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற S.T.N.நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் விஜயலஷ்மி, தங்கலஷ்மி, பொன்ராஜலஷ்மி, பாக்கியலஷ்மி, லெனின் நாகலிங்கம், கஸ்ரோ நாகலிங்கம், ஏஞ்சல நாகலிங்கம், நவலஷ்மி, மாக்ஸ் நாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், லோகேஸ்வரன், யோகநாதன், முருகையா, தாமரா, ஸ்ரீகௌரி, வானதி, ராஜசேகரம், கிருஷ்ணசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், திருஞானசுந்தரம், காலஞ்சென்ற தேவாமிர்தசுந்தரம், பஞ்சாட்சரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடேசரத்தினம், நல்லகுணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் விஜயந்தி, நிலானி, நிலக்ஷா, சிந்துரேகா, சாந்திரேகா, பிருந்தாபன், சேத்தனா, அஸ்வந், சிகான், லெனிஷா, ஷினுகா, அபிராமி, ஸ்ரெபினிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2005) புதனகிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவிததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.T.N.நாகரத்தினம் வீதி, சுன்னாகம். (40979)(43-14-16)
தகவல்: கஸ்ரோ (மகன்).


நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன் (இருவேடம்)
லைலா
வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு. இரவு 8.45
ANACONDA - 2
(C/39654)




நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், சினேகா, வடிவேல், மஞ்சளி நடித்த
ஆயுதம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தருண், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
(C/39654)




## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

பாஷையூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (18.01.2005) செவ்வாய்க்கிழமை கொழும்பில் அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் செபஸ்ரியாம்பிள்ளை பிறிச்சிட் அம்மாவின் அன்புக் கணவரும் றெமீசியஸ் (London), கனீசியஸ் (Switzerland), கமில்டா (Germany), றோஸ்லீமா (London), அன்ரனியஸ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும். இறுதிக்கிரியைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, சென்.செபஸ்ரியன் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: 0714884422, 0777033311, 0714912727, 0777423519. (41070)(43-14-16)

### திருமதி சின்னத்தம்பி அன்னம்மா



12 ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னம்மா 17.01.2005 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் ஆறுமுகம் -சின்னாச்சிபிள்ளையின் அன்பு மகளும் நாகமணி - நாகமுத்துவின் அன்பு மருமகளும் யோகம்மா (லண்டன்), காலஞ்சென்ற கனகாம்பிகை, நாகம்மா (கொழும்பு), தியாகராசா, கண்ணம்மா சோமசுந்தரம் (லண்டன்), காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புத் தாயாரும் கனகரத்தினம் (லண்டன்), பூபாலசிங்கம் (சுவிஸ்), குமரையா (கொழும்பு), கமலாதேவி, பன்னீர்ச்செல்வம் (கொழும்பு), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பொன்னையா, காலஞ்சென்ற வள்ளியம்மை, செல்லையா (கொழும்பு), காலஞ்சென்ற ராசையா, காலஞ்சென்ற நல்லதம்பி, நரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஐயாத்துரை, மனோன்மணி (லண்டன்), J.P.சண்முகம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை, காலஞ்சென்ற விசுவலிங்கம், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற சின்னம்மா, காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

No.13, சீனிவாசம் றோட், கொட்டடி. (41073)(43-14-16)
தகவல்: சி.தியாகராசா (மகன்).

### லயன் கார்த்திகேசு கேசவன்

(மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதசிவசுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாக சபை உறுப்பினருமான லயன கார்த்திகேசு கேசவன் அவர்கள் நேற்று (18-01-2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் புதலவரும் மல்லாகத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சேயோன் (பிரான்ஸ்), பாலமுரளி (இ.போ.ச.,காரைநகர்), முகுந்தன் (முகுந்தன் வர்த்தக நிலையம், சுன்னாகம்-யாழ்ப்பாணம்) முகுந்தன் நடமாடும் வர்த்தக சேவை), முரளிதரன், செந்தில்ராசா, (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்தீஸ்வரன் (ஓய்வு பெற்ற சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி, காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் மனோன்மணி (நெசவு ஆசிரியை), கிருபாகரன் (கிளைமுகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.ச.) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நாகராசா, சச்சிதானந்தன் (இ.போ.ச., கோண்டாவில்), செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் சின்னத்தம்பியின் பெறாமருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சோடாக்கம்பனி ஒழுங்கை மல்லாகம், தெல்லிப்பழை. (41069)(43-14-16)
தகவல்: கே.முகுந்தன் (மகன்).

### கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (சூட்டி)

(பிரபல பயண ஊர்தி சாரதி)



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (சூட்டி) 16.01.2005 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் கதிர்காமநாதன் - நகுலேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் டினுஜா, ஐஸ்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரி, ஞானேஸ்வரி, விமலேஸ்வரி, ராம்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோகரனின் (ராசா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2005) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது சிறுப்பிட்டி இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் புத்தூர் கிந்திட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி. (சி-40515)(43-14-16)
தகவல்: இ.கதிர்காமநாதன் (நாதன் -தந்தை).

## ஆயுதமுனையில் துணிகரக் கொள்ளை

கொழும்பு.ஜன.19

பாணந்துறை மக்கள் வங்கிக்கிளை நேற்றுப் பட்டப்பகலில் ஆயுத பாணிகளால் கொள்ளையிடப்பட்டது. அங்கு காவற்கடமையிலிருந்த பாதுகாவலரின் துப்பாக்கியையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இத்துணிகரக் கொள்ளை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வானொன்றில் வந்த நான்கு இனந்தெரியாத ஆயுததாரிகள் பாணந்துறை மோதரவில என்ற இடத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்குள் திடீரெனப் புகுந்தனர். அங்கு கடமையில் இருந்த பாதுகாவலர்களையும், ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் மிரட்டி அவர்களை நிலத்தில் அமர்ந்திருக்குமாறு உத்தரவு பிறப்பித்துவிட்டு தமது கைவரிசையைக் கொள்ளையர்கள் காட்டினர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ஐ-க)


சென்ற ஆண்டு இங்கு கற்ற மாணவர்கள்
பெற்ற அதிவிசேட பெறுபேறே
இன்று வினா - விடை வகுப்பின் சான்று
**விக்னா**
**கல்வி நிறுவனம்**
தமிழ் - திரு. குழந்தை
A/L DAY CLASS
வினாவிடை வகுப்பு
ஆரம்பம்- 25.01.2005 செவ். - 8.30மணி
A/L 2005 (DAY)
பிரிவு I - 8.30 - 9.30
பிரிவு II - 9.30 - 10.30
பிரிவு III - 10.30 - 11.30
திங்கள், புதன், வெள்ளி.
(சி-40495)


## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு - தலைவர் பிரபா பேச்சிலும் கலந்துகொள்வார் பாலசிங்கம். இம்முறைவன்னியில் இருவாரங்களுக்குத் தங்கியிருப்பார் என்று தெரிகின்றது.

கடந்த முறை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்ஸன் வன்னிக்கு வந்து தலைவர் பிரபாவைச் சந்தித்தபோதும், பாலசிங்கம் லண்டனிலிருந்து வந்திருந்தார். எனினும், அந்தச் சந்திப்பு இடம்பெற்ற மறுநாளே அவர் லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

தடைப்பட்டுப் போயிருந்த சமாதான முயற்சிகளை முன்நகர்த்தும் நோக்கோடு ஜனாதிபதி சந்திரிகா அப்போது பீற்றர்ஸனை இலங்கைக்கு வரவழைத்திருந்தார். ஆனால், பீற்றர்ஸனின் அப்போதைய முயற்சிகள் எந்தவிதப் பயனையும் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## சமாதான முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவார்கள். சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவது குறித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் புறக்கணிக்கப்படுவது குறித்தும் இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

சந்திப்பின் பின்னர் முல்லைத்தீவுக்குச் செல்லும் நோர்வேக் குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் பார்வையிடுவர். அத்துடன், அங்கு இடம்பெறும் நிவாரண மற்றும் மீட்புப் பணிகளையும் அவர்கள் பார்வையிடுவர்.

கொழும்பில் தங்கியிருக்கையில், அரசமற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களையும் அவர்கள் சந்தித்துப் பேச்சுநடத்துவர். (ஐ-க-7)

## வெளிநாட்டுப் பொருளாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நேரடியாக உறுதி செய்யப்பட வேண்டும். இங்குள்ள நடைமுறைச் சாத்தியமான கட்டமைப்புகள் மூலம் உதவிகளை பகிர்வதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்று எமது நிலைப்பாடுகளை வலியுறுத்திள்ளோம்.

நெதர்லாந்து அரசு நிலைமைகளை மதிப்பீடு செய்து வருகின்றது. நிச்சயமாக சர்வதேச சமூகம் இணைந்து இங்குள்ள பாதிப்புகளுக்கு உதவிகள் புரிய முன்வரக் கூடிய சாத்தியப்பாடுகள் நிறையவே உள்ளன - என்றார் தமிழ்ச்செல்வன்.

சிறிலங்கா அரசு பெருமளவு ஆயுதக் கொள்வனவில் இறங்கியுள்ளது தொடர்பாக கருத்துக் கேட்டபோது அதற்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன் -

அவற்றை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். அதாவது சிறிலங்கா அரசு மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலில் ஒரு யுத்த வெறிப் போக்கையும், இனவாத போக்கையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என்பதற்கு பல உதாரணங்களைச் சுட்டிக்காட்டி இச்சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

அவசரகாலச் சட்டத்தை மீண்டும் எமது பிரதேசங்களுக்கு பிரகடனப்படுத்தியதுடன் சிறிலங்கா இராணுவத்தை நலன்புரி நிலையங்களிலும் மக்களின் மனிதாபிமான நிவாரணப் பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளது.

தற்போது சிறிலங்கா அரசு சர்வதேசத்தின் பாரிய உதவிகள் வந்து குவிகின்ற நேரத்தில் உடனடியாகவே தமது இராணுவக் கட்டமைப்புகளைப் பலப்படுத்தும் நோக்கோடு இராணுவ தளபாட கொள்வனவுக்கு பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்து, ஆயுதக் கொள்வனவிற்காக ஒரு குழு சென்றுள்ள செய்திகளையும் இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளோம்.

இந்த நேரத்தில் சிறிலங்கா அரசு, தனது இராணுவக் கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கும் மீண்டும் தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தொடங்குவதற்குரிய சாதகமான சூழ்நிலையாகவும் பாரிய பொருளாதார உதவிகளை அரசு பயன்படுத்தி வருவதாக சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளோம் என்றார் - தமிழ்ச்செல்வன்.

ஆயுதக் கொள்வனவு படைவலுச் சமநிலையைப் பாதிக்காதா என்ற கேள்விக்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன் -

சிறிலங்கா அரசின் ஆயுதக் கொள்வனவு என்பது படைவலுச் சமநிலையைப் பாதிக்கும் என்பதினை சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். சர்வதேச சமூகமும் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயும் இராணுவச் சமவலு நிலையையும் சமபலத்தையும் சமமாக மதித்து இரண்டு தரப்பையும் யுத்தநிறுத்த உடன்பாட்டுக்குள் கொண்டு வந்த காரணத்தினால்தான் கடந்த மூன்று ஆண்டு காலமாக அமைதி நிலை தோற்றுவிக்கப்பட்டது - என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ-8-7)

## பிக்-அப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ அம்பாறை - பிக்-அப்-3, ஜெனரேட்டர்-30

மொத்தமாக பிக்-அப்-12, பெட்டியுடன் டிராக்டர்-10, பெட்டியுடன் இருசக்கர டிராக்டர்-20, ஜெனரேட்டர்-90, நீர்ப்பம்பிகள் -50 என்பன அனுப்பப்பட்டுள்ளன. இப்படி அந்தச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-7)


**D.C.M** யாழ்நகர் 2005 A/L DAY
Logic S.R.J. சுதன்
A/L 2005 Day
துரித அதிவேக மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 21.01.2005
வெள்ளி மு.ப. 10.00 (ப.நே.)

அன்றும்....... இன்றும் இனி என்றுமே
**விக்னா கல்வி நிறுவனம்**
பொருளியல் - திரு.K.உதயன்
**A/L 2006**
பிரிவு I - சனி, ஞாயிறு 11.30 - 12.30
பிரிவு II - சனி, ஞாயிறு 8.30 - 9.30
**புதிய பிரிவு 3**
ஆரம்பம்: 22.01.2005 சனி, ஞாயிறு 7 - 8 மணி
**A/L 2005**
சர்வதேச வர்த்தகம் சனி, ஞாயிறு 10.30 - 11.30
சந்தை சமநிலை வரைவு சனி, ஞாயிறு 12.30 - 1.30
**புதிய பிரிவு ஆரம்பம்**
சனி, ஞாயிறு 4 - 5 மணி (மாலை)
**A/L 2005** DAY CLASS
திங்கள், புதன், வெள்ளி காலை 7 மணி
அரச பாதீடும் குறிக்கோளும்
**A/L 2007**
பிரிவு I - சனி, ஞாயிறு 9.30 - 10.30
பிரிவு II வெகு விரைவில் ஆரம்பமாக இருக்கிறது. (சி-40493)

SPECIAL OFFER **Softview Computer College**
50% Discount
(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 875/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 1375/= |
| Diploma in Computer Programming | 8 Months | 2800/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 1800/= |
| Diploma in Network Engineering | 4 Months | 2850/= |
| Diploma in Visual Basic | 4 Months | 1375/= |
| Diploma in Computer Science | 4 Months | 1375/= |
| Diploma in AutoCAD | 4 Months | 1375/= |
| Diploma in C++ | 4 Months | 1375/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

பிரிவு II ஆரம்பம் 21,23.01.2005
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
SPOKEN ENGLISH With GRAMMAR
BY: BRITTO
ஆரம்பம்: 20/01/2005
வியாழன் 4.30 p.m.
(40921)

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
A/L 2006 தமிழ்
By: கமலநாதன்
★ இலக்கிய வரலாறு
★ நாயக்கர் காலம்
SAT., SUN. - 8.30 a.m.
(40923)

COMPUTER COURSES
New Batch
Batch - III
January 23

IBMS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I : 09.01.2005
பிரிவு II : 10.01.2005
பிரிவு III : 23.01.2005
பகல் 10.00 மணி
Diploma Courses
Dip in Microsoft Office
Dip in Internet Technology
Dip in Desk Top Publishing
Dip in Hardware Engineering
Dip in Visual Basic - Programming
Dip in Java Programming
Certificate in Information Technology
காலம்: 2 மாதங்கள் மட்டுமே
கட்டணம் : 2000/- மட்டுமே
O/L. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கைநெறி
தலைமை அலுவலகம் : #410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri

விசேட விலைக் கழிவு
KODAK EXPRESS
புகைப்படச் சுருள் பிரதியாக்கம் 4 R அளவுகளில் 10.00
CD க்களின் மூலம் பிரதியாக்கம் செய்யும் 4 R மொத்தக் கொள்வனவுகளுக்கு 9.00
CD க்கள் மூலம் செய்யும் அனைத்து அளவுகளிலான பிரதியாக்கங்களுக்கு (திருமண வாழ்த்துமடல், CD COVER, பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள் Etc.)
அனுபவம், சிறந்த தொழில்நுட்பம், துரிதசேவை
அனைத்துக்கும்
நாடுங்கள்:
ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் [கொனிக்கா கலர் லாப்]
இல.14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3493
(சி-40490)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிற்றம்பலம்



புலோலி கிழக்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிற்றம்பலம் அவர்கள் நேற்று (18.01.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் லஷ்சுமி - சின்னத்தம்பி தம்பதிகளின் மகனும் முருகேசு - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ராதாகாந்தி (கனடா), வனிதாகாந்தி (யாழ்ப்பாணம்), லலிதாகாந்தி (வெள்ளவத்தை), ஜெயாகாந்தி (அமெரிக்கா), லதாகாந்தி (கனடா), பிரபாகாந்தி (கனடா) ஆகியோரின் தகப்பனாரும் கலா (கனடா), தில்லைநடராஜா (யாழ்ப்பாணம்), அரியரட்ணம் (யாழ்ப்பாணம்), விக்கினேஸ்வரி (அமெரிக்கா), புஸ்பகாந்தன் (கனடா), மித்திராதேவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் பிருந்தாகாந்தி, வருணகாந்தி, நிர்ஷாகாந்தி, சஞ்சீவ்காந்தி, சுகிர்தாகாந்தி, நிருத்திகாகாந்தி, ஜெஷேன், யோஷ்வா, ராசீலா, மயூரி, நிகாரிகா, ஆர்த்திகா, சாயிகிருத்திக், கஜானன் ஆகியோரின் பேரனும் இரத்தினம் (கனடா), காலஞ்சென்ற இரத்தினசபாபதி, பொன்னுத்துரை, ரூபசிங்கம் (கிளிநொச்சி), இராசசிங்கம் (யாழ்ப்பாணம்), துரைசிங்கம் (கிளிநொச்சி), சாந்தகுமாரி (சுவிஸ்), நிர்மலாதேவி (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராஜா, சரஸ்வதி, யோகம்மா, பரமேஸ்வரி, கமலாதேவி, சுமதி, கந்தசாமி, பாலாஜி, காலஞ்சென்ற நமசிவாயம், இராசையா (திருகோணமலை), காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற முத்தையா, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2005) புதன் கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மா.அரியரத்தினம்*
*(சிற்றிவைன் ஸ்ரோர்ஸ்)*
*புலோலி கிழக்கு, புலோலி.* (41075)(14-18-38)

தகவல்:
வனிதாகாந்தி, லலிதாகாந்தி (மகள்மார்).


EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.